1229

உ

ஓம்

ஸ்ரீ கணேசாய நம:

# தன்னையறிதலும், தலைவனையுணர்தலும் பின்னையுபாசனை பேசுவதன்றியும்

# சிவனே குகனெனச் செப்புமிந்நூலே.

இஃது
தில்லைவளாகம்
சிவகுருநாதநிலய வாசியாகிய
திருச்செந்தூர்
**ஆனந்தசண்முகசரணாலயரால்**
எழுதப்பெற்றவை.

**கல்விமாநகர்**
திருவள்ளுவர் கலாசாலை ஸ்தாபகர்களும்
ஸ்ரீ சௌந்தரநாயகி சங்க அபிமானிகளுமாகிய
**தனவைசிய சிலர்களால்**
திருவாரூர்
"எட்வர்ட்" அச்சுக்கூடத்தில்
மானேஜர் T. B. அரங்கஸ்வாமி பிள்ளையால்
...திப்பிக்கப்பெற்றது.

...-ஞூ கார்த்திகை-மீ

OFFICE OF THE REGISTRAR
2 MAR 1925
MADRAS

Q23:417
N25
171277

உ
கணபதி துணை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 MAR 1925
MADRAS

# முகவுரை.

காப்பு.

ற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
ற்குஞ் சரக்கன்று காண்.

உலகத்தின்கண்ணே பிறந்திறந்துழலாதது எது அதுவே பதியெனப்படும் கடவுளாம். உலகத்திலே பிறந்திறந்துழல்வன யாவை அவையெல்லாம் பசுக்களெனப்படும் ஆன்மாக்களாம். ஆன்மாக்கள் பிறந்திறந்துழல்வதற்குக்காரணமாய்நின்றதுஎது அதுவே பாசமெனப்படுமலமாம். இவைதாமே பதி, பசு, பாசமென்னும் மூன்றற்குமுள்ள வித்தியாசத்தை எளிதிலுணர்த்துவனவாகும்.

உலகிற் பற்பலசமயங்களிலவினும், சைவசமயமே முப்பொருளுண்மையைக்கூறுவனவாம். அதுநோக்கியே:—

"சைவசமயமேசமயஞ் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டுமிந்தக்கருத்தைவிட்டு
பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா முத்திதருந்
தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே"

எனவருளினர் சிவானுபூதிச்செல்வராகிய தாயுமானார்.

அத்திருவாக்கைச்சிந்திக்குமிடத்து, சைவசமயமே சிறந்தசமயமெனவும் அதீதமாகிய சைவசமயத்தாற் பெறப்படும் அநாதிப்பழம்பொருள் சிதாகாச மத்தியில் அனவரததாண்டவம்புரியாநிற்கும் ஸ்ரீ நடராஜவள்ளலேயெனவும் இன்னவுண்மையைப் பயவாத பொய் நிரம்பியொழுகும் புன்சமயங்களிற் புக்கு வருந்தவேண்டாமெனவும் பரமவீட்டைத்தரும் தெய்வசபையாகிய அச்சிதாகாயத்தை தெரிசித்தற்பொருட்டு இங்கே வந்துசேருங்களெனவும் உலகத்தவரை இதம்பேசியழைத்த

17127



வெளிப்பட்டது, (சைவசமயமே சமயம்) என்று ஏகாரத் தேற்றம் பெறக்கூறினமையால் இதற் குயர்ந்தமார்க்கம் கிடையாதென்பது போதரும். சைவம் என்பது சிவசம்பந்தமுடையதெனப் பொருடாலால் சிவத்தின்மேலிட்டதொரு பொருள் உண்டாயின்றே சைவசமயத்தின்மேலிட்டதொரு சமயமுமுள்ளதாகும். சிவத்துக்குச்சமானமான பொருளும் அதிகப்பொருளுங் கிடையாவென வேதங்கள் முறையிடல்கண்டுதெளிக. சிவம் என்னுஞ்சொல் மங்கலம், சுபம், முத்தி யென்பனவாகிய பொருள்களைப்பயத்தலால் அதன் சம்பந்தமான மார்க்கம் சுபமார்க்கம் மங்கலமார்க்கம் முத்திமார்க்கமென்றே விளங்கும்.

அவ்வாறு பலமார்க்கங்களேற்படுதற் கேதுவென்னையெனின் பசுக்களாகிய ஆன்மாக்கள் பாசமறைப்பினாலே சிற்றறிவுடையனவாதலின் கடவுள் நன்மை தீமைகளைக்காட்டி முதனூலாகிய வேதாகமங்களை யருளிச்செய்தார். ஆன்மாக்களின் கன்மபேதங்கள் பலவாயின்மையின் நூல்களும் வழிநூல் சார்புநூலெனப் பலவாயின. அவைதாம் கடவுளைப்பற்றியொழுகுமார்க்கங்களும் பலவாயின. அங்ஙனமே, உலகத்தில் அனந்த சமயங்களுண்டாதற் கேதுவாயிற்று. சமயங்களாவன கடவுளை வழிபட்டுய்யுமார்க்கங்களாம்.

ஒரு ஊரைக்கிட்டியடைவதற்குப் பல மார்க்கங்களுளவாயினபோலக் கடவுளையடைந்துய்தற்கும் பல நெறிகளுளவாயின. ஊரை அடையும் பல வழிகளில் சில சுற்றுவழியாயும் சில கடினவழியாயும் சில நெடுநாள்செல்வனவாயும் சில அபாயத்தை யுண்டுபண்ணுவனவாயுமிருத்தல்போலக் கடவுளையடையும் விதத்திலும் சிலசமயம் சுற்றாயும் சில சமயம் கடினமாயும் சில அபாயத்தை யுண்டுபண்ணுவனவாயு மிருக்கும். ஒரு ஊரைக் கிட்டியடைவதற்குக் கிளைவழிபற்றிச் செல்வானொருவன் தான்கொண்ட கிளைவழி யெல்லாந் தாண்டிச் சென்று அக்கிளைவழி கொண்டுய்க்கும் பெருநெறி பிடித்தே அவ்வூரை யடைவான். அதுபோல மறுசமயங்கொண்டொ

மூழுவோர் அச்சமய முதிர்ச்சியால் சைவசமயஞ் சார்ந்தே முத்தியடைதல் வேண்டும். ஆதலால் தலைமைபெற்றதூஉம் சிவபெருமானால் அருளிச்செய்யப்பெற்ற வேதம் ஆகமம் என்னு முதநூல்களையுடையதுமான சமயம் சைவசமயமே யாம். ஆயின் ஏனைச்சமயங்களின்முத்திநிலையின்றோவெனின்,

"சாவீபோமற்றைச் சமயங்கள்புக்குநின்
றாவியரு தேயென் றுந்தீபற
வவ்வுரைகேளாதே யுந்தீபற" எனத்திருவுந்தியாரினும்

"முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே"

எனத்திருவாசகத்தும் கூறியவற்றை யுணர்க.

எல்லாச்சமயத்தாரும், முத்தியடையவேண்டும்; முத்தியடையவேண்டும் எனக்கூறினும் அதன்பொருளையுள்ளவாறுணரார்கள். முத்தி, மோட்சம், வீடுஎன்பன ஒருபொருட்சொற்கள். முத்திஎன்றது விடப்படுதலென்றாகும். ஆயின், எதைவிடுதலென வினாநிகழும். கட்டைவிடுதலென்பது விடையாம். யார்விடுதலென வினாநிகழும். கட்டுப்பட்டோன் விடுதலென்றாகும். கட்டுப்பட்டோன் எங்ஙனம் விடுவானென்பது வினா. விடுவிப்போன்ஒருவன்வேண்டுமென்பது விடையாம். ஆகவே கட்டும் கட்டுப்பட்டோனும் விடுவிப்போனுமென முப்பொருள் வேண்டப்படும். ஆகவே, கட்டாகிய பாசமும், கட்டுப்பட்டோனாகிய பசுவும், விடுவிப்போனாகிய பதியும்என முப்பொருளுண்டெனக்கூறுவது மறுக்கப்படாத சித்தாந்தமாம். இவை

"வீடென் றறைதரு சொற்குப் பொருளோ விடுதலை யாதலினால்
வீக்குண் டோனுங் கட்டுமுன்னர் விளங்குந் திடமாகப்
பீடுறு கட்டுத் தானாய் விட்டுப் பெயரா நிதுசடமாம்
பிணிபட் டோனசுதந்தர னமப்பிணிபெய ரச்செய்வோ
னீடுசுதந்தர னுளனு மொருவ னேருமிவ் வேதுவினால்
நிகழ்பதி பசுபா சம்மெனு முப்பொருணித்திய மென்றருளி
வேடனை வெல்லுங் குருவாயெனையாள் மெய்ப்பொருணீயன்றோ
வேதகி ரிப்பவரோகவைத்திய வேணிமுடிக்கனியே"

எனத்திருப்போரூர் ஸ்ரீ சுப்பிரமணியர் சந்நிதானவிளக்கி வரப்பிரசாதியாயெழுந்தருளியிருந்த சிதம்பரஸ்வாமிகள் அருளிய வேதகிரீசர் பதிகப்பாசுரத்தானும் தெளிக. அதனால் மெய்ஞ்ஞானிகள்,

"சைவத்தின்மேற் சமயம் வேறிலையதிற்சார் சிவமாந்
தெய்வத்தின்மேற் றெய்வமில்லெனுநான் மறைச்செம்பொ
மைவைத்தசீர்த் திருத்தேவாரமுந்திருவாசகமும் [ருள்வாய்
உய்வைத்தரச் செய்தநால்வர் பொற்றாளெம் முயிர்த்துணை
எனவும், சைவசமயமே சமயமெனவுங்கூறினர். [யே"

"பேயன்னபுறச்சமயப்பிணக்குநூல்வழியனைத்தும் பிழையேயன்றி வாயன்மை தெளிந்துசைவ சித்தாந்த நெறிதேறி யதிதவாழ்விற் போயண்மியைந்தெழுத்து திருநீறுங்கண்டிகையும் பொருளக்கொண்ட, நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும் பெரும்பேறு நாம்பெற்றோமால்."

"பாய வாருயிர்முழுவதும் பசுபதியடிமை
யாய வெவ்வகைப் பொருள்களு மவனுடைப்பொருள்கள்
மேய விவ்வண மலதுவே றின்றென வுணர்ந்த
தூய மெய்த்தவத் தடியவர் துணையடி தொழுவாம்"

என்றதனாலுங்காண்க.

இன்னும் சொல்லப்பட்டசமயங்களும், சமயப்பொருள்களையுணர்த்தற்கேதுவாகிய நூல்களும், மாறுபட்டனவாகவுள்ளன பலவாதலின் இவற்றுள், முதன்மையானசமயம் யாது, அச்சமயப்பொருளையுணர்த்தும்நூல் யாதென்றற்கு சிவஞானசித்தியாரில்—

இதுபொருந்தும் அதுபொருந்தாதென்னும்பிணக்கின்றி முறைமையான் இவையனைத்தும் ஒருங்கேகாணப்பட்டு நின்றது எச்சமயமோ அதுவே முதன்மையான சமயமும் அச்சமயப்பொருளையுணர்த்தும் நூலே நூலுமாதலின், கண்ணில்லார் பலர் குழீக்கொண்டு வேழம் நின்றுழிச் சார்ந்து, கையினாற்றைவந்து நீங்கி வேறுவேறு கூறும்இலக்கணங்களெல்லாம் கண்ணுளானொருவன்கண்டுகூறும் அதனிலக்கணத்துள் ஏகதே

சமாய்க் காணப்பெற்றடங்குமாறுபோல, ஏனைச்சமயநூலார் தத்தஞ் சிற்றறிவிற்குப் புலனாயவாறுபற்றி அவ்வந்நூல்களிற்கூறும் பொருளியல்புகளெல்லாம், முற்றுணர்வுடைய முதல்வனால் செய்யப்பட்ட அரியவேதாகமங்களிற் கூறும் பொருளியல்பின் ஏகதேசமாய்க்காணப்பெற்று அவற்றுளடங்குதலின் அதுவே முதன்மையான சமயம்ஆம். சிவபிரானாற் செய்யப்பெற்று அவனையே தமக்கு முதலாகக்கொண்டுரைக்கும் அவ்விருவகை நூலும், அவ்விறைவன் றிருவடியினடங்குதலின் அவையே நூல்களாமென்க.

ஆதலின், சைவசமயமே, ஆன்மாவாகிய தன்னையும் தனக்குத்தலைவனாகிய பதியையும் தலைவனையுணரவொட்டாது தன்னறிவை மறைக்கும் பாசத்தையும், விளங்கக்கூறுவதாமென்பது அறிஞருரை.

### அவையடக்கம்.

"இத்திற மொழிந்த தீச னின்னருள்பெறுவதற்கே
புத்தியின் விருப்பமன்றி புவியிலோர் புகழுக்கில்லை
சத்திய மிதுவாமுண்மைச் சச்சிதானந்தமாகி
முத்தியின் வித்துமான முருகனே யறிவனம்மா."

## இந்நூலுரிமை.

இப்பரதகண்டத்தில் எந்த நன்னாட்டினும் செந்தமிழ் நாடே சிறந்ததாமெனவும், அதினுஞ்சிறந்த தங்கயற்கண்ணி யரசுசெய்தமர்ந்த பாண்டி நன்னாடே பழம்பதி யெனவும், புலவர் சிகாமணிகளால் புகழப்பெற்றதூஉம், அந்நாட்டின் கணுள்ள பலவருணத்தவர்களிற் சிறப்புற்றவர்கள் தனவைசிய குலோத்தமர்களே என்பதூஉம் அவர்களே ஆங்காங்குள்ள க்ஷேத்திரங்கள்தோறுஞ்சென்று, பசு புண்ணிய பதி புண்ணி

யங்களை இலக்க விலக்கமாகிய பொருட்செலவு செய்து புண்ணி யப்பயனெய்தி மேன்மேலும் செல்வம் பெருகவாழ்ந்து வருப வர்களென்பதூஉம் உலகறிந்த விஷயமேயாம்.

அத்தன்மைவைசிய குலத்தவர்களில் கல்விமாநகர் வாசி களும், அந்நகரிற் பெருஞ்சிவாலயப்பணி செய்வித்து பரிபா லித்து வருபவர்களும் திருவுங் கல்வியுந் திகழ்பேரறிவும் மருவிய வொழுக்கமு வள்ளற்றன்மையும் வாய்ந்த, மெ. ராம. வெள. சாமிநாதசெட்டியாரவர்கள், ஆ. மு. ஆ. முருகப்ப செட்டியாரவர்கள், வெ. சொக்கலிங்க செட்டியாரவர்கள், கரு.பெரி.பழ. அழகப்ப செட்டியாரவர்களென்னும் நால்வரும் ஸ்ரீநடராஜப்பெருமான் ஆலயசம்புரோக்ஷணதரிசனார்த்தமாய் விஜயஞ்செய்து மடாலயத்திற்றங்கியும் தங்கள் குலதெய்வமும் அடியேன் வழிபடு கடவுளுமாகிய ஸ்ரீ சாமிநாதமூர்த்தியைத் தரிசனஞ்செய்தமாத்திரமே பொருட் செல்வத்தையும் அருட் செல்வத்தையும் மேன்மேலெய்துதற்குப் பாத்திரராகி சிவ குருநாத மூர்த்திக்கு ஆலயத்திருப்பணி செய்வதாக வாக்க ளித்துச் செய்துவருகிறபடியால், அந்நன்றிமறவா ஞாப கார்த்தமாக, முன்னோர் மொழிந்தவையும் பொன்னேபோற் போற்றுவமென்றபடி அறிஞருரையினின்று மெழுதி, சைவ சித்தாந்த சாரசங்கிரகமென்னும் பெயருடன் வசனநடையில் எழுதி அச்சியற்ற விருந்தவற்றிற்சில விஷயங்களைத்தற்சமயம் அச்சியற்றி அன்னார்கட் குரிமையாக்கியதுமன்றி மெய்ப்பொரு ளுண்மையின் மெய்ப்பொருள் விளங்கும் சாரசங்கிரகநூலையும் பின்பு அச்சியற்றி அவர்கட்கே யுரிமையாக்கத் திருவருளைப் பிரார்த்திக்கின்றேம்.

ஆனந்த சண்முக சரணாலயன்.

உ

# தன்னையறிதல்.

தன்னையறிதலாவது :— இந்தச் சரீரமும் இதிலுள்ள பொருள்களும் ஒன்றல்ல. யாவர்க்கும் சாதாரணமாய்க் காணப்படுவது சரீரம். இது மண்ணும் நீரும் நெருப்புங் காற்றும் ஆகாயமும் என்னும் ஐந்து பூதங்களின் சேர்க்கையாலுண்டானதொன்று. இந்தச் சரீரத்தில் ஐந்து விதமான அறிவுகள் நிகழ்கின்றன. அவையாதெனின்; சத்தத்தையறிதல், பரிசத்தை யறிதல், உருவத்தை யறிதல், சுவையையறிதல், நாற்றத்தை யறிதல் என்பவைகளாம். சத்தம் செவியின்வழியாக அறியப்படுகின்றது; பரிசம் மெய்யின் வழியாக அறியப்படுகின்றது. உருவம் விழியின்வாயிலாக அறியப்படுகிறது; சுவை வாயின்வழியாக அறியப்படுகின்றது; நாற்றம் மூக்கின்வழியாக அறியப்படுகின்றது. இப்படி ஐந்து தானங்களில் ஐந்தறிவு நிகழக் காண்கின்றோம். இப்படி ஒவ்வொரு தானத்து, ஒவ்வோரறிவு நிகழக்காண்டலால் அந்தந்த தானத்திற்றான் அந்தந்த அறிவு நிகழ்தற்கேற்ற கருவிகளிருக்கின்றனவென்பது பிரகாசமாம். அந்தக் கருவிகளுக்கு இந்திரியமென்று பெயர். இப்படிச் சரீரத்தினகத்தே ஐந்து விடயங்களையுமறிதற்கேற்ற கருவிகளாக இந்திரியங்களிருத்தலால் இவை சரீரத்தின் வேறான பொருளென்பது இனிது புலப்படும். படவே, சரீரமும் இந்திரியமுமாகிய இருவகைப்பொருள்கள் ஒருங்கு கூடியிருத்தல் பிரகாசமாம். இம்மட்டோ அவ்விந்திரியங்கள் தனித்தனியாயறிகின்ற விடயங்களை அவற்றோடு கூடிநின்று, இது சத்தம், இது பரிசம், இது ரூபம், இது சுவை, இது நாற்றம் என ஒருங்கே பற்றி சங்கற்ப விகற்பஞ்

செய்கின்ற பொருளொன்று இவற்றின் வேறாகவுண்டென்று தெரிகிறது. அக்கருவியே மனமென்று அறிவுடையோராற் சொல்லப்படுவது. அம்மனம் புறத்து நிற்றலின்றி அகத்திருந்து புறத்துள்ள விடயங்களை அகத்தேபற்றி வாங்குதலால் அகக்கருவியென்று சொல்லப்படும். மனம் பற்றிய விஷயங்களை அகத்துக் கண்டெழுங்கருவியுமொன்று. மனத்தினும் வேறாகவுளது. அது அகங்காரமெனப்படும். அவ்விஷயத்தை இது யாதாகற்பாற்றெனச் சிந்திக்குங் கருவியுமுளது. அது சித்தமெனப்படும். அதனை யறியுங் கருவியு மொன்றுளது. அது புத்தி யெனப்படும். அப்புத்தி யறிந்ததனை இது சுகம், இது துக்கம், என ஒட்டியறிபவன் ஒருவனுளன். அவனை புருடனும். அப்புருடனதறிவுக்குப் புறத்திலுள்ள சத்தமுதலிய விடயங்களைக் கொண்டுவந்துதருவன மனமுதலிய அகக்கருவிகள். புருடன் அவற்றோடுகூடி புறத்திலுள்ள விடயங்களை இந்திரியவாயிலாக அறிந்து அனுபவிக்கின்றான். இவையே சரீரத்தின் புறத்தும் அகத்தும் நடக்குங் காரியங்களாம்.

இவ்வாறு அகத்தும் புறத்தும் இருப்பனவாகிய பொருள்கள் பலவாயிருத்தலால் இவற்றினுள்ளே தான் யாரென்று தன்னை யறிந்து தன்னைப் பெறவேண்டிய வுரிமை யாவர்க்குளது.

சிலர் சரீரமே தானென்பர், சிலர் இந்திரியங்களே தாமென்பர், சிலர் மனமுதலிய கரணங்களே தாமென்பர், சிலர் யாவுஞ்சேர்ந்ததே தாமென்பர், வேறு பலர் ஒன்றும் விசாரியாமல் பாமரராகத் திரிவர். விசாரிப்பவரே தன்னை யறிந்து தலைவனை யுணர்ந் தடைவானன்றி, ஏனையோர் ஒரு பயனும்பெறார்.

முற்கூறியோர் கூற்றாகச் சரீரத்தையே நாமென்னில், சரீரம் இந்திரியம் அந்தக்கரணங்கட்கு இடமாய்ப் புறத்தியங்கும் பொருளன்றி அகத்தறியும் பொருளல்லாமையால் அதனை நாமென்றலமையாது.

இந்திரியங்களையே நாமெனமதிப்பினும் அவை புறத்தே சரீரத்தைப்போல அகக்கருவியினின்று அறிதற்கு இடமாய் மட்டுமிருத்தலால் அவற்றை நாமென்றலு மமையாது.

அந்தக்காரணங்களை நாமென்று புத்தி பண்ணினும், அவை இந்திரியவாயிலாக வந்த விடயங்களைப் புருடனுடைய அறிவுக்கு அறிவிக்கு முரிமைமாத்திரமுடையனவாய் சுக துக்கானுபவவுணர்ச்சிக்கு உரிமையில்லாதனவாயிருத்தலால் அவற்றை நாமென்றலும் அமைவதன்று.

ஆதலால் இச்சரீரத்தையும் அதைப்பற்றிப் புறத்தே யுள்ள இந்திரியங்களையும், தனுகரணமாகக் கொண்டு சுகதுக்க போகங்களை யனுபவிக்கும் புருடன் எவனோ அவனே நா மென்று ஒருவாற்று லறிதலே விவேகமாம்.

இன்னும் நுணுகி யாராயுங்கால் இப்புருடனினும் வேறான பொருள் ஒன்றுண்டென்று விளக்கமாம். என்னை? இச்சரீரத் தினகத்து நிகழும் சுக துக்கானுபவ உணர்ச்சி என்றும் நிகழ் வதன்று. ஒருக்கால் நிகழ்தலையும் ஒருக்கால் நிகழாதொழி தலையும் காண்கின்றோம். அதனால் இப்புருட நிலையை யடை ந்து, சுக துக்கானுபவ முழுவதும் அடையாது வாளாவிருப் பதுமான பொருளொன்று புருடனினும் வேறாகவுண்டென்று உணர்தல் வேண்டும். அப்பொருளே ஆன்மா; ஆன்மாவுக்கு சுக துக்கபோகங்கள் கன்மானுசாரமாய்வருவன. அக்கன்மம் பக்குவமானபோது உணவாகும்; அல்லாதபோது உணவாக மாட்டாது. பக்குவகன்மம் சுகதுக்க ரூபமாய் அனுபவமாக வேண்டியபொழுது அக்கன்மத்தை நியதியென்னுந் தத்துவம் கொண்டுவந்து நிறுத்தும். கலையென்னும் தத்துவம் ஆன்மா வின் கிரியாசத்தியை யெழுப்பும். வித்தையென்னுந் தத்துவம் ஆன்மாவின் ஞானசத்தியை விளங்கச்செய்யும். அராகதத்து வம் ஆன்மாவின் இச்சாசத்தியை யெழுப்பும். ஆன்மா அவற் றோடுகூடி இச்சாஞானக் கிரியாசொரூபியாய் நியதிதத்துவம் நிறுத்தின கர்மப் பயனை அனுபவிக்க முயலுவன்; அக்கன்மப்

பயன் இத்தனைபொழுது அனுபவமாக வேண்டியதென்னும் காலவரையறையைக், கால தத்துவஞ் செய்யும். ஆன்மா இவ்வைந்தனோடுங் கூடும்பொழுதே புருடனாகின்றான். புருடனாகியே சுக துக்கம் நுகர்கின்றான். ஆதலால் ஆன்மா தன்னிலையில் வேறாயும் காலம், நியதி, கலை, வித்தை, அராகங்களுடனே கூடியபொழுது புருடனாயும் விளங்கு மியல்பு உடையனென்பது நுண்ணிய விசாரத்தாற் பெறப்படும். படவே இந்த நிலையில் புருட தத்துவ நிலை தத்துவங்களோடுகூடிய வுபாதி நிலையாதலால் அது தன்னியல்பின் வேறாகும். தன்னியல்பே உண்மை நிலை. உபாதிநிலை யதனின் வேறாம்.

ஆதலால் "நாம்" என்னும் சொல்லுக்குப் பொருளாய் நிற்கத்தக்கது ஆன்மாவேயாம். அந்த ஆன்ம நிலையையறிந்தவன் எவனோ அவன் தன்னையறிந்தவனாவன்.

ஒருவன் தன்னையறியாதபோது சரீரமுதலியவற்றைத் தானென்றுகருதி மயங்குகின்றான். தன்னையறிந்தபோது தெளிவடைகின்றான். இவ்வளவுமாத்திரமன்று. இன்னும்தன்னையறிதலில், வேறுசில விசாரங்களுமிருக்கின்றன.

ஆன்மாவாகிய நாம் சித்துப்பொருள், மேலே கூறிய தத்துவங்கள், சடப்பொருள்கள், நம்மினும் அவை யெல்லா வகையாலும் வேறானவை. அப்படியிருந்தும் நாம் அவற்றோடு கூடிச் சுகதுக்கம் அனுபவிக்கநேர்கின்றது. அவ்வனுபவத்தை இத்தத்துவங்கள் தருதற்கும் நாம் அவற்றை அடைதற்கும் காரணமென்னவென்று ஆராயின் அது முன்செய்த வினையாகிய கன்மத்தாலென்று தெரிகிறது. அக்கன்மமாவது புண்ணிய பாவவினை. அவ்வினை, பிறர்க்குச்செய்த நன்மை தீமைகளாலேறுவது. நாம் சேதன வஸ்துவாயிருந்தும் பிறர்க்குநன்மை தீமை செய்யநேர்ந்தது யாதினாலெனில் அறியாமையாலாம். சேதனப்பொருளுக்கு அறியாமை எப்படி உண்டாயிற்றென்னில் ஆணவ மலத்தினாலாம். ஆதலால், ஆன்மாவாகிய நாம் ஆணவமலத்தோடு கூடி யறியாமையுடையவராய் புண்ணிய

பாவங்களைச்செய்து கன்மசம்பந்தம் பெற்று மாயாகாரியங்களாகிய தத்துவங்களைச் சார்ந்து சுகதுக்கமெய்தி வருதலாகிய உபாதியையுடையேம் எனவறிக.

இன்னும் நாம் இவற்றோடு கூடிப் பிறந்திறந்து முத்தொழிற்படுங்காலத்து சுதந்தரமற்றவராயிருத்தலால் நம்மை இவ்வாறு தொழிற்படுத்துபவர் யாவரென்று விசாரித்தல் வேண்டும். அப்படி விசாரிக்கும்பொழுது நம்மைப்போல மலகன்ம மாயைகளின் வசப்படாது அறிவுமுத்த சித்துருவாய் விளங்கும் பதிப்பொருளொன்று விளக்கமாம். அவர் நம்மை இவ்வாறு தொழிற்படுத்துதல் யாதுபயனோக்கியெனஆராயின் நம்முடைய மலோபாதியை நீக்கி நமக்கு மோக்ஷந்தரும் கருணையினாலேயாமென்றுதெரியவரும்.

ஆதலால் நமக்கென சுதந்தரமில்லாத இயல்புடைய நாம் அம்முதல்வனும் பதியுமாகிய சிவசொரூபத்தையுணர்ந்து, சிவோபாசனைசெய்து, அவனருளாலே மும்மலபந்தத்தினீங்கி நித்தியமானப் பேரின்பப் பெருவாழ்வைப் பெற்றனுபவிக்க வேண்டிய வுரிமையுடையவர்களாயுமிருக்கின்றோம்.

இவ்வாறு தன்னையறிந்தவனெவனோ அவனே தலைவனாகிய கடவுளையுணர்ந்து பந்தத்தினீங்கி மெய்முத்தியடைவான்.

## கடவுள்.

வினா:—தலைவனாகிய கடவுள் ஒருவருளர் என்பது எதனாற் பெறப்படும்?

விடை:—இந்தவுலகந்தோன்றிநின்று அழியுங்காரியமாய் சடமாயிருத்தலினாலும் அசேதனப்பிரபஞ்சமெல்லாம் சேதனமானஉயிர்களின்பொருட்டே யுண்டாக்கப்பட்டுவிளங்குதலினாலும், உயிர்கள் முற்றறிவு சுதந்தரா முதலியன அற்றவர்களாயிருத்தலினாலும், சேதனமும் அசேதன

முமான இருவகை பிரபஞ்சத்தையும்வைத்துநடத்துதற்குரிய முற்றறிவு, முற்றுத்தொழில், சுதந்திர முதலிய மேலான குணங்களையுடைய ஒருபொருள் இவற்றிற்கு வேருக வேண்டப்படுவது இன்றியமையாததொன்ரும். அங்ஙனஞ் சித்திக்கும்பொருளெதுவோ அதுவே கடவுளெனப்படுவது.

வினு:— அந்தக்கடவுள் எந்தவுலகத்திலிருப்பர்?

விடை:—கடவுள் ஒருலகத்திருப்பவரல்லர். உலகத்திலிருப்பவர் சரீர முடையவர்கள். கடவுள் உலகத்திலிருப்பவராஞல் அவருக்கும் சரீரமிருக்கவேண்டும். உலகமுஞ் சரீரமு முண்டாஞல் அவையும் தோன்றி யழிவனவாம். தோன்றியழிதல் கன்மங் காரணமாக நிகழ்வது. அக்கன்மம் ஆணவமலத்தால் வருவது; கன்மத்தால்வந்த சரீரமும் உலகமுதலியவை மாயாகாரியங்கள். உயிர்களுக்கு உடம்பு முதலியவையும் உடம்புக்கேதுவான கன்மமும், அவ்விரண்டற்கு மேதுவான ஆணவமலமும், இவையாவுமிருக்கின்றன. கடவுளுக்கு இவையெல்லாம் முளவென்னில் அவரும் இவ்வுயிர்களில் ஒருவராவார். அன்றி முற்றறிவு, முற்றுத்தொழில், சுதந்திரமுதலிய குணங்களும் அவருக்கு இல்லையென்ருகும். இப்படி அனேக குற்றங்கள் நேருமாதலால் உலகத்திலிருப்பவரென்று சொல்லலாகாது.

வினு:— கடவுள் வேறெங்கிருக்கிருரென்று சொல்லலாம்?

விடை:— எந்தப்பொருளையுமியக்குவது அவருடைய சத்தி. அதனுல்எல்லாப்பொருளிலும் அவருடையசத்தி தங்கியிருத்தல்பெறப்படும். படவே சத்தியையுடைய சத்திமாஞகியகடவுளும் எங்குமிருக்கிருரென்பது தானேபோதரும்.

வினு:— கடவுளும் சேதனம், நாமும் சேதனம் அப்படியிருக்க நம்மையும் அவரையும் வேறு வேறு பொருள்களென்று சொல்வானேன்?

விடை:— கடவுள் தாமாக அறிந்து நமக்கும் அறிவிப்பர். நாம் அங்ஙனமின்றி அவர் அறிவிக்க அறியுமியல்புடையோம். அதனால் இருபொருளும் சேதனமாயினும் அதனில் வேறுபாடுகாணப்படுகின்றது. அன்றி கடவுள் அநாதிமலமுத்தர்; நாம் அநாதிமலபெத்தர்; கடவுள் நம்மைத் தொழிற் படுத்துபவர்; நாம் அவராற்றொழிற்படுபவர்; அவரால்முத்தி பெறுபவர். ஆதலால் எல்லாவகையாலும் வேறுபட்ட இரண்டுபொருளையும் ஒன்றுக்கக்கூறுவதெவ்வண்ணம்?

வினா.— கடவுளு மலமும் ஒளியுமிருளும்போலப் பகைப்பொருள்கள். அவ்வாறாக உயிர்களிடத்தில் அவ்விருபொருளும்அநாதியே கூடியிருத்த லெவ்வாறாம்?

விடை:— நீரும் நெருப்புமாகிய பகைப்பொருளிரண்டும் ஒரே பசுமரத்தில் கூடியிருக்கவில்லையா? அதுபோலவே சிவமும் மலமும் உயிர்களிடத்தே கூடியிருக்கும்.

வினா:— கடவுள் உள்ளவன்றே மலமும் கூடியிருப்பின் மலம் உயிர்களை எவ்வாறு விட்டு நீங்கும்?

விடை:—பசுமரத்தில் நீரும் நெருப்புங் கூடியிருப்பினும் மரமுலர்ந்தகாலத்துநீர் நீங்கிவிடுதல் காண்குதுமன்றே. அதுபோலப் பக்குவான்மாக்களைமலம்விட்டு நீங்கிவிடுமென்க. மரத்தில்நெருப்பு மேலிட்டதினாலேயே நீர்விட்டு நீங்கிற்று. அதுபோல் உயிர்களின் பக்குவம்நோக்கிச் சிவமேலிட்டிருப்பதால் மலம் நீங்கிவிடும்.

வினா:— கடவுள் எல்லா உயிர்களின் மலத்தையும் ஒருங்கே நீக்காமல் சில சில உயிர்களாகக் காலாந்தரத்தில் நீக்கி வருதல் என்னை?

விடை:— ஒரு குளத்திலே அனேக தாமரை யரும்பிருந்தாலும் அதையலர்த்துஞ் சூரியன் யெல்லாவற்றையுமொருங்கேயலர்த்தாமல் சில சிலவாகக் காலாந்தரத்தில்

அலர்த்திவரக் காண்கின்றோம் அல்லவா அதற்குக் காரணமென்ன? அவற்றின் முதிர்ச்சியும் முதிர்ச்சியின்மையுமன்றே. அதுபோல உயிர்களிற் பக்குவர்மலத்தை நீக்கி அபக்குவர்மலத்தை நீக்காது விடுகின்றனர். அவ்வுயிர்களும் பக்குவமெய்தியபோது மலம்நீங்கப் பெறும்.

வினா:— அப்படியானால் கடவுள் பக்குவரிடத்துமாத்திரம் அருள் வைப்பவரென்றும், அபக்குவரிடத்து அருள் வைக்கவில்லை யென்றுமாகும். அது கடவுளினுடைய கருணைக்கிழுக்கன்றோ?

விடை:— அன்று, சூர்யனுடைய கிரணம் எல்லாத்தாமரையரும்பினும் சமமாகவே தங்குகின்றது. அரும்புகளோ முதிர்ந்தவை மலருகின்றன. முதிராதவை மலரவில்லை. அதனால் சூர்யனாவது கிரணமாவது குறையுடையனவையாகா. அரும்புகளே பருவக் குறையுடையனவையாகின்றன. அதுபோலவே கடவுளுடைய அருள் எல்லா உயிர்களினும் தங்குகின்றதாயினும் பக்குவர் மலம் நீங்கி முத்தியுறுகின்றனர். அபக்குவர் முத்தியுறாதிருக்கின்றனர். இக்குறை உயிர்களின்பாலதாமன்றி கடவுளின் பாலதாகமாட்டாது.

வினா:— அபக்குவரிடத்தே அருள் தங்கி நின்றால் அது செய்யுங்காரியமென்ன?

விடை:— தாமரையரும்பினிடத்தே தங்கிய சூர்ய கிரணம் அவ்வரும்பை முதிர்வித்து மலரும் பக்குவமுடையதாக்குதல்போல அபக்குவரிடத்தே தங்கியுள்ள அருள் அவரைப் பக்குவராம்படி செய்யும். முதிராத அரும்பை முதிர்வித்தலும் முதிர்ந்ததனையலர்த்துவித்தலும் ஆகிய இரண்டு தொழில் சூரியகிரணத்தின் செயலேயாயவாறு அபக்குவரைப் பக்குவராக்குதலும் பக்குவர்க் கனுக்கிரகித்தலும் ஆகிய இரண்டு தொழில் கடவுளருளாலேயே நடக்கின்றன.

வினு:— பக்குவர் அபக்குவர் இருவரையும் ஒரே காலத்தில் மலம் நீக்கி யுய்வித்தல் கடவுளால் முடியாதோ ?

விடை:— அது வினுவன்று; அரும்பை மலர்த்தும் வல்லமை சூர்யனிடத்தில்லா திருக்கவில்லை; மலருந்தன்மை அரும்பிலிருக்கவில்லை, அதுபோலவே அநுக்கிரகிக்குமியல்பு கடவுளிடத்திருக்கிறது; அதைப்பெறுந்தன்மை அபக்குவரிடத்தில்லை. ஆதலால் மாட்டாமை கடவுளிடத்தன்று உயிர்களிடத்ததேயாம்.

ஆதலின் கடவுளுடைய சொரூப விலக்கணம் தடத்த விலக்கணத்தை யுணர்ந்து, சிவம், ஆன்மா, மலம், கன்மம், மாயை என ஐந்து பதார்த்தங்கள் நித்தியமாயுள்ளனவெனக் கூறும் சைவ சித்தாந்த நெறிதேறி தன்னையுணர்ந்தும் தலைவனாகிய சிவனையுணர்ந்தும் சிவோபாசனை செய்தும் சிவானந்த வாழ்வெய்தியிருத்தலே இவ்வரிய பிறப்பாலாய பயனும்.

ஆன்மாவும் சித்து, சிவனுஞ் சித்து, இந்த விரண்டுந் தம்மிற் கூடி யொன்றுதலே முத்தியெனின், பேறும் பெறுவானுமின்றாம் தலைவனாகிய சிவனையுபாசித்து சிவானந்தத்தைப் பெறுதலே முத்தியாம்.

"சிவன் சீவனென்றிரண்டுஞ் சித்தொன்றுமென்னிற்
சிவனருட் சித்திவனருளைச் சேருஞ் சித்தவன்றான்
பவங்கேடு புத்தி முத்திபண்ணுஞ் சித்தவற்றிற் படியும்
சித்தறிவிக்கப்படுஞ் சித்திவன்றான்
அவன்றானே யறியுஞ் சித்தாதலினுலிரண்டு மணைந்தாலு
மொன்றாகாதநனிய மாயிருக்கும்
இவன்றானும் புத்தியுஞ்சித்திவனுமோ புத்தியிது வசித்தென்றிடி
லவனுக்கிவனு மசித்தாமே" — சிவஞானசித்தியார்.

# சிவம்.

சி — என்பது, கிடத்தலெனப் பொருள்படும்; அஃதாவது- எல்லாப்பொருள்களும் இறுதிக்காலத்துத் தன்னிடத் தொடுங்க; அவைபோலத் தானொடுங்குதலின்றி அவற்றிற்

கெல்லாம் ஒடுங்குமிடமாய் நிலைபெற்று என்றும் ஓரே தன்மையுடையதாய் நிற்பதென்பது. அதன் பொருளாம். இறுதிக்காலத்து உலகமனைத்தும் தத்துவங்களினும், தத்துவங்கள் மாயையினும், மாயை சிவ சத்தியினும், சிவசத்தி சிவத்தினும் ஒடுங்க சிவம் அவையனைத்தையுமொடுக்கிச் சுயம்பிரகாசமாய் நிற்குமென்பது வேதாகம நூற்றுணிபாம்.

வ—என்பது அப்பொருளின்குணமகிய, சத்தியையுணர்த்தும் அது சூர்யனின் ஒளிபோல்வது, ஒளியும் சூர்யனும் வேறல்லவாயினும், குணத்தன்மை குணித்தன்மை யென்னும் வேறுபாட்டால் இருவகையாக எண்ணப்படும். அவ்வாறே சத்தி சிவம் என்பன குண குணி பாவத்தால் இருதன்மையுடையனவென மதித்து அப்பொருள் பயக்கும் பெயராய் ஈரியல்பினையுமடக்கிச் சிவமெனப்படும்.

அச்சிவத்தினியல்பு ஞானமும் ஆனந்தமுமாம். ஞானமென்பது-சத்தும் சித்துமாய இருதன்மையை யடக்கிநிற்கும். சத்தாவது-காரியகாரணப்படுதலின்றி என்றும் ஓரே படித்தாய்நிற்பது. சித்தாவது உணர்த்த உணர்த்தலின்றித் தானே சுயம்பிரகாசமாய் நிற்பது. இந்த இரண்டு தன்மையு முதல்வனிடத்துள்ள விசேடவியல்பாம். அதுவே ஞானமெனப்படும், ஆனந்தமாவது- சர்வஞ்ஞத்துவம், திருப்தி, அனுதிபோதம், சுதந்தரம், அலுப்தசத்தி, அனந்தசத்தி, நிராமயான்மா விசுத்ததேகம் என எண்குணமுடைமையாம்.

இச்சிவத்தின் குணம்பல்வற்றுள் உயிர்கள்மேல்வைத்த கருணைக்குணம்பராசத்தி எனப்படும். அக்கருணையின் வசப்பட்டு நின்ற சிவம் அந்நிலையில் பதியெனப்படும். அப்பதியினது சந்நிதானத்தில் உலகம் ஐந்தொழிற்படும். அவ்வைந்தொழில் நடத்தற் கேதுவாய்நின்ற பதியினது சத்தி ஆதிசத்தி, அல்லது திரோதாயி எனப்படும். அப்பதியும்அவ்வாதிசத்தியும், சூரியனும் அதன்கிரணமும்போலாம். சூரியசந்நிதானத்தில் அதன் கிரண விசேஷத்தால் தாமரை அரும்பு

தலும், மலர்தலும் புலர்தலுமாகிய காரியப்பாட்டை எப்படி யடையுமோ அப்படியே பதியினுடையசந்நிதானத்தில் உலகம் தோன்றிநின்று அழிதலாகிய காரியப்பாட்டினை யடையும். இந்தவுவமானத்தில் தாமரையினது காரியப்பாட்டால் சூரியனுக்கு யாதொரு விகாரமுமின்மை எவருமறியத்தக்கது. அது போலவே உலகினது காரியப்பாட்டில் முதல்வனுக்கு விகாரமின்மை தெளியப்படும். இன்னும் இவ்வுவமானத்திற் சூரியகிரணமும் விகாரப்படுதலில்லை. அதுபோல் ஆதிசத்தியும் விகாரமடைதலில்லை. அச்சத்தி உயிர்கட்கு மலத்தை நீக்கி சிவத்தையளிக்கவிரும்பியபொழுது இச்சாசத்தியெனப்படும். அதன்பொருட்டுச் செய்யவேண்டிய உபாயங்களை யறியும் போது ஞானசத்தியெனப்படும். அவற்றைச் செய்யும்போது கிரியாசத்தி எனப்படும். இவ்வாறு வியாபாரபேதம்பற்றி ஐவகையாகக்கொள்ளினும் முதல்வனது சத்தி ஒன்றேயாம்.

இன்னும் ஆதிசத்தி ஐந்தொழில் செய்யு மவதாரத்தில் ஆரிணி, ஜநநி, ரோதயித்திரீ எனமுத்திறமாக எண்ணப்படும். அச்சத்திகள் மூன்றும் பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்னும்பஞ்சகர்த்தாக்களை யதிட்டித்துக் கொண்டுநின்று முறையே தொழில்செய்விக்கும்.

ஆரிணியானது—ஆன்மாக்களுடைய தனுகரணாதி சர்வத்தையும் மாயையிலேயொடுக்கிப் பக்குவரைச் சிவத்திலே யடைவிக்கும். ஆகையால் சங்காரமும் அனுக்ரஹமும் ஆரிணியினுடைய கிருத்தியங்களாகும்.

ஜநநியாவது — ஜகத்துற்பத்தியைப் பண்ணுவிக்கும். ஆகையால் சிருட்டி யொன்றே, ஜநனியின் கிருத்தியமாகும்.

ரோதயித்திரியானது—திதிகாலத்திலே ஆன்மாக்களுக்குப் போகநியமனத்தையும் பிரளயத்திலே சகலர்க்கும் மாயாதோபாகத்திலும், பிரளயாகலர்க்கு மாயா மத்தியிலும், விஞ்

ஞானகலர்க்கு மாயோச்சியிலும் நியமனத்தை பண்ணுவிக்கும். ஆகையால் திதியும் திரோதானமும் ரோதயித்திரியி னுடைய கிருத்தியங்களாகும்.

அச்சிவசத்தி இவர்களிடத்தே தங்கி இவர்களை யதிட்டித்து ஐந்தொழில் செய்தலால் இவர்களும் சிவ வடிவங்களாக உபசரித் தெண்ணப்படுவர். உண்மையில் அவர்கள் அதிட்டான வடிவங்களாம்.

அதிட்டானமாவது— நிலைக்களமாகக்கொண்டு செலுத்துதல். பதியின் ஆதிசத்தி ஆரிணி முதலிய மூன்றாக நின்று ஐந்து கர்த்தாக்களை யதிட்டிக்குமென்று நன்குணரத்தக்கது. அது எதுபோலுமென்னில் அரசனுடைய ஆணையாகிய சத்தி மந்திரி முதலாகிய பலரிடத்து நின்று அவ்வப்பெயர்பெற்று அவ்வவர்க்குரிய தொழிலை நடத்துவதுபோலும் என்க.

இன்னு முதல்வன் ஊரும் பெயரும் உருவும் கடந்தவனாயினும் உயிர்களினிடத்தே வைத்த கருணையால் ஊரும் பெயரும் உருவும் கொண்டருளுவர். அப்படிக்கொள்ளுமிடத்துத் தனது அருட்சத்தியினிடமாகக்கொள்வதும்மாயையினிடமாகக் கொள்வதூஉமென்றும் வேறுபாடுபற்றி அவை இருவகைப்படும். அருட் சத்திகளினிடமாகக் கொள்ளும் வடிவங்கள் சம்புபக்ஷமெனப்படும். மாயையினிடமாகக் கொள்ளும் வடிவங்கள் அணுபக்ஷமெனப்படும். ஆடியினிழல்போல் வது அருட்சத்தியினிடமாகத் தோன்றுவது. அது பூசை தியானுதிகளின்பொருட்டுக் கொள்ளப்படும்கற்பிதவடிவமாம்.

சூரிய சந்நிதானத்தில் இருள் முனைத்து நில்லாவாறுபோல சிவம் என்னும் பொருளினெதிரே மலமாயை கன்மங்கள் முனைத்து நில்லா. அதனாலவை சிவத்தினாலியக்கமுறுமென்று கொள்ளுதலமையாது. அதுபற்றியே சத்தியானது ஏகதேச வியாபரிப்பில் அவை தொழிற்படுமென வேதாகமங்கள் கூறும், இனி மாயாகாரிய வடிவமுதல்வனெதிரே

அசத்தாயொழிதலின் அவ் வடிவினை யென்றுகொள்ளான். அதனாலவை சத்தியி னதிட்டானமாகிய அணுபட்சங்களெ ன்ற வுண்மை யுணரற்பாற்று.

இவ்வகையில் அயனும் அரியும் பிரகிருதி யுட்பட்டவ ராகலின் அவ்வியல்புடைய சகலவர்க்கத்துள் அதிகாரம் பெற்றவரென எண்ணப்படுவர். உருத்திரமூர்த்தி பிரகிருதியை நீங்கினவராதலின் அவ்வியல்புடைய பிரளயாகலருள் முத் தராய் அதிகாரம்பெற்றுச் சிவவடிவெய்தி நிற்பவராக எண்ண ப்படுவர். மகேஸ்வர சதாசிவர்கள் ஈசுர சாதாக்கிய தத்துவ நிலையாதலின் இறைவனது சுதந்தரவடிவமாகிய அதிகார போக ரூபங்களாம். இவையனைத்திலும் பதியினது சத்தியே நிலவுவதாம். அக்கினியானது ஒன்றிற்றங்கி நின்றல்லது தொழில் செய்யாது. அதுபோலவே சிவசத்தியும் ஒவ்வோர் வடிவங்களை யதிட்டித்து நின்றே தொழில்செய்யும். தாம ரையின் காரியப்பாடு சூரிய கிரண சம்பந்தத்தால் நிகழ்தல் போல ஐந்தொழிற்படுமுறைமை சிவ சத்தி சம்பந்தத்தால் நிகழ்வனவாம். அதனால் முதல்வனுக்குளதாகிய இவ்வியல்பு பொதுவியல்பென்னப்படும்.

தாமரைக்கும் சூரியனுக்குமுளதாகிய சம்பந்தம் எத்து ணையோ அத்துணையே உலகுக்கும் பதிக்கு முளதாகிய சம் பந்தமும். அதுபற்றிவரும் பொதுவியல்பும் சூரியனாலே தாமரை காரியப்படுமென்பது மறுக்க வியலுவதன்று. அது போலவே உலகம் பதிப்பொருளால் காரியப்படுமென்பதூஉ மறுக்கத்தக்கதன்றாம்.

இனி முதல்வன் உயிர்கள்பொருட்டாகக் கொள்ளும் உருவங்களில் உமாமகேசுரர், தெக்ஷிணாமூர்த்தி, நடராஜர், முதலிய இருபத்தைந்து வடிவங்களும் அவற்றுள்ளும் பல பேதங்களுள்ளனவென்பது உண்மையாம். அவை ஒவ்வோர் காலத்து ஒவ்வொருவர்பொருட்டு ஒவ்வொரு காரணம்பற்றிக் கொள்ளப்பட்டன. இவ்விருபத்தைந்து கேவல மூர்த்தங்

களும் மகேசுரரால் கொள்ளப்பட்டன. அவை யுருத்திரமூர்த்திக்கு முரியனவேயாம். பிரம விஷ்ணுக்கள் அவ்வடிவினை யெடுத்தற்குரியரல்லர். அவரது சகளநிலையே அங்ஙனமொழிதற்குக் காரணமாம்.

இன்னும் பதிப்பொருளாகிய சிவம் ஆன்மாக்கள் பொருட்டுத் திருமேனி கொள்ளுமிடத்து நம்போல மாயா காரிய சரீரங்கொள்ளாது தம்மின் வேறற நிற்கும் அருளாகிய சத்தியாலே கற்பிக்கப்பட்டிருக்கிற திருமேனியுடையராவரென்பது,

"ஆரண வாகமங்க ளருளினு லுருவுகொண்டு
காரண னருளா ஞகிற் கதிப்பவ ரில்லையாகு
நாரணன் முதலாயுள்ள சுராசுரர் நாகர்க்கெல்லாம்
சீரணி குருசந்தானச் செய்தியுஞ் சென்றிடாவே."

"உருவருள் குணங்களோடு முணர்வரு ளுருவிற்றோன்றுங்
கருமமு மருளரன்றன் கரசரணுதி சாங்கம்
தருமரு ளுபாங்க மெல்லாந் தானருடனக்கொன்றின்றி
யருளுரு வுயிருக்கென்றே யாக்குவ னிந்தனன்றே."

என்னும் சிவஞான சித்திப்பாசுரத்தானுந் தெளிக.

எப்பொருளும் தம்முள் வியாப்பியமாயடங்க எவற்றினு மேம்பட்டு அப்பாற் செல்லும் எல்லைகடந்த அவருடைய சத்தி ஈசானமூர்த்தாவென்றுசொல்லப்படும். (மூர்த்தா-தலை).

சர்வாண்ட பிண்ட சராசர வஸ்துக்களிலும் நிறைந்து பரிபூரணமாயிருக்கிற அவருடைய சத்தி முகமாக எண்ணப்படும். அதுவே தற்புருட வக்திரமாம்.

கோரமாகிய பஞ்ச பாசங்களும் தம்மை யணுகாமலும் தமது பிரகாசத்தின்முன்னே முளைத்து நில்லாதொழியத் தக்கதாயுமுள்ள மலவிரோதியான சத்தியானது இருதயமென்று சொல்லப்படும்; அதுவே அகோர இருதயமாம்.

நுண்ணிய பொருளெவற்றினும் மிக நுண்மையாயுள்ள அவருடைய சூக்கும நிலையும் எவ்வுலகங்களுக்குங் காரண

மாயிருக்கிற தர்மமும் நாபியாம். அதுவே பரமதேவருஷப மெனப்படும்.

இச்சாமாத்திரத்தினாலே சிருட்டித்தொழிலை நடத்தும் சத்தியான அநுபாதங்காமுதலிய வடிவங்களாம்; அதுவே சத்தி யோசாதமூர்த்தி யெனப்படும். இந்த ஐந்து தர்மங்களாகிய சத்திகள் அவருக்குச் சூக்கும வடிவாய் விளங்கும்.

இன்னும் அவரது ஞான சொரூபம் இருதயமாம். அவரது சர்வோன்னதநிலை சிரசாம். பிறிதொன்றன் வயப்படாது. எவற்றையுந் தம்மில் வசித்துநிற்கும் அவருடைய சத்தி சிகையாம். தமக்குத்தாமே காப்பாய் தம்முளடங்கிய எப்பா பொருளிலும் வியாபித்து அவற்றைக் காத்துநிற்கும் அவருடைய சத்தி கவசமாம். சர்வஞ்ஞதையாகிய குணமே நேத்திரமாம். அவருடைய பிரதாபமே அஸ்திரமாம்.

இப்படி அவருடைய சத்திகளே அங்கங்களாயிருக்கின்றன. ஆரிணி, ஜநநி, ரோதயித்திரி என்னு மூன்று சத்திகள் காரணங்களாயுள்ளன.

இனி அச்சிவபெருமான் திருக்கரங்களிலுள்ள ஆயுதம் பத்தாகும். அவை—திரிசூலம், பாசு, கட்கம், வச்சிரம், அபயம், நாகம், பாசம், அங்குசம், கண்டை, அக்கினி என்பனவாம்.

இவற்றுள் திரிசூலமாவது—ஆரிணி, ஜநநி ரோதயித்திரி என்னு மூன்று சத்திகளேயாம். திரிசூலத்தை யேந்துதல் இந்த மூன்று குணங்களும் அவரிடத்துள்ளன வென்பதை வெளிப்படுத்தும்.

மழுவாகிய பாசு வாய்மை யென்னுங் குணவடிவாம். அவருடைய பிரதாபகுணமே கட்கமாம்.

எவ்விதத்தாலும் வலிந்து பேதிக்கமுடியாத அவருடைய இயல்பு வச்சிராயுதமாம்.

ஆன்மாக்கள்மேல் வைத்த அநுக்கிரக குணமே அபய முத்திரையாம். குண்டலிசத்தி யென்னும் சுத்த மாயையே பாசமாம். விவர்ணமே அங்குசமாம்.

சத்தமூலமான நாதமே கண்டையாம்.

பாசங்களைத் தகிக்கும் அவருடைய அருட்குணமே அக்கினியாம். சிவம் உயிர்களின் பாசபந்தம் நீக்கி முத்தியளித்தற்பொருட்டுத் தம் அருட்குணங்களாகிய வடிவமும் சொல்லிய பத்து ஆயுதங்களும் உள்ளவராயிருப்பர்.

உயிர்கள்மேல் வைத்த அருளே உமாதேவியாரென்னும் சத்தியாம். பசுவெனப்படும் ஆன்மாவே அவர் எழுந்தருளும் வாகனமாகிய இடபமாம். ஆன்மாக்களிடத்து அருட்குணங்களோடு எழுந்தருளியிருந்து பாசபந்தம் நீக்கி முத்தியருளுதல் அவர் கொள்ளும் அருள்வடிவின் பிரயோஜனமாமென்பது இதனால் விளங்கும்.

சிவஞான சித்தியார்.

உலகினை யிறந்துநின்ற தரனுரு வென்ப தோரார்
உலகவ னுருவிற்றோன்றி யொடுங்கிடு மென்பதோரார்
உலகினுக் குயிருமாகி யுலகுமாய் நின்ற தோரார்
உலகினி லொருவ னென்ப ருருவினை யுணரா ரெல்லாம்.

தேவரி லொருவ னென்பர் திருவுருச் சிவனைத்தேவர்
மூவராய் நின்றதோரார் முதலுருப்பாதி மாத
ராவது முணரா ராதி யரியயற் கறிய வொண்ணு
மேவரு நிலையுமோரா ரதனுரு,வினைவுமோரார்,

போகியா யிருந்துயிர்க்குப் போகத்தைப்புரித லோரார்
யோகியா யோகமுத்தி யுதவுத லதுவு மோரார்
வேகியா னற்போற்செய்த வினையினை வீட்டலோரார்
ஊகியா மூடரெல்லா மும்பரி லொருவனென்பர்.

ஒன்றுடொன் றுவ்வாவேட மொருவனே தரித்துக்கொ [ண்டு
நின்றலா லுலகு நீங்கி நின்றனை னென்றுமோரார்
அன்றியவ் வேடமெல்லா மருள்புரி தொழிலென்றோரார்
கொன்றது வினையைக்கொன் றுநின்றவக்குணமென்றோரார்.

நாயகன் கண்ணையப்பா ஞாயகி புதைப்ப வெங்கும்
பாயிருளாகிமூடப் பரிந்துலகினுக்கு நெற்றி
தூயநேத்திரத்தினாலே சுடரொளி கொடுத்த பண்பிற்
றேயமா ரொளிகளெல்லாஞ் சிவனுருத்தேசதென்னார்.

கண்ணுதவியோகிருப்பக் காமனின்றிட வேட்கைக்கு
விண்ணுறு தேவராதி மெலிந்தமை யோரார்மாறு
னெண்ணிவேண் மதனையேவ வெரிவிழித்திமமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்துயிர்க்குப் பேரின்ப மளித்ததோரார்.

படைப்பாதி தொழிலும் பத்தர்க்கருளும் பாவனையு நாலு
மிடப்பாக மாதராரோ டியைந்துயிர்க் கின்பமென்று
மடைப்பானு மதுவுமூதி யளித்திடு மியோகும்பாசந்
துடைப்பானுந் தொழிலுமேனி தொடக்கானேற் சொல்லொணாதே.

உருமேனி தரித்துக்கொண்ட தென்றலு முருவிறந்த
வருமேனி யதுவுங் கண்டோ மருவுரு வானபோது
திருமேனி யுபயம் பெற்றோஞ் செப்பிய மூன்றுநந்தங்
கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவுகாணே.

ஒருவனே யிராவணாதி பாவகமூற்றூற்போலத்
தருவனிவ் வுருவமெல்லாந் தன்மையுந்திரியானாகும்
வரும்வடிவெல்லாஞ் சத்தி சத்திதான் மாமுங் காழ்ப்பு
மிருமையும்போல மன்னிச் சிவத்தினோ டியைந்துநிற்கும்.

பொன்மைநீலாதி வன்னம் பொருந்திடப் பளிங்கிவற்றின்
றன்மையாய் நிற்குமாபோற் சத்திதன் பேதமெல்லா
நின்மலன்றானாய்த் தோன்றி நிலைமையொன்றாயே நிற்பன்
முன்னருட் சத்திதன்பான் முகிழ்க்குந்தான் முளையானன்றே.

சத்தியுஞ் சிவமுமாய தன்மையிவ் வுலகமெல்லா
மொத்தொவ்வா வாணும்பெண்ணு முணர்குண குணியுமாக
வைத்தன னவளால்வந்த வாக்கமிவ் வாழ்க்கையெல்லாம்
இத்தையு மறியார்பீட லிங்கத்தினியல்புமோரார்.

சிவனுரு வுருவுமல்லன் சித்தினோ டசித்துமல்லன்
பவமுதற்றொழில்க ளொன்றும் பண்ணிடு வானுமல்லன்
றவமுத லியோகபோகந் தரிப்பவ னல்லன்றானே
யிவைபெறவியைந்து மொன்றுமியைந்திடா வியல்பினானே.

# சிவோபாசனை.

வேதசிவாகமங்கள் சிவனை யுபாசிக்குமாறு விதிக்கின்றன. சிவம் ஞானானந்த வஸ்துவாதலின், ஆன்மா அதனைவழிபடுதலால் அச்சிவப்பொருளுக்கு வரக்கடவதோர் பிரயோசன மிருக்கமாட்டாது. சிவம் அருட்பிழம்பாகலின், வணங்கியவர்க்கு அநுக்கிரகஞ் செய்தலும், அல்லாதார்க்கு நிக்கிரகஞ் செய்தலும் ஒவ்வா. ஆதலால் அவ்வணக்கம் ஆன்மப் பிரயோசனங் கருதியதாகவும், அஃதின்மை ஆன்மசுகத்துக்குக் கேடுள்ளதாகவும் இருக்கவேண்டும்.

ஆன்மா பளிங்குபோன்று எதையெதைச் சார்ந்ததோ அதனதன் குணத்தைத் தன்குணமாகக் கொள்ளுமியல்பிற்று. அதனால் அநாதியே தன்னோடியைந்துள்ள மலமாயா கன்மங்களின்றன்மைகளைத் தன்றன்மையாகக்கொண்டு இடர்ப்படுகின்றது. ஆணவமல குணத்தைத் தன்குணமாகக் கொண்டதனால் யானெனதென்னுஞ் செருக்கும், மாயையின் குணத்தைத் தன்குணமாகக்கொண்டதனால் சுக துக்க மோகங்களும், கன்மத்தின் குணத்தைத் தன் குணமாகக் கொண்டதனால், எண்ணரிய பிறவிகளுமுண்டாம். ஆன்மா ஞானசொரூபியாயிருந்தும், தன்னதல்லாத பிற குணங்களைத் தன்னதாகக் கொள்ளுதற்கேதுவாயிருந்தது சார்ந்ததன் வண்ணமாமியல்புடைமையேயாம். அதனால் அவ்வுபாதியினின்றும் நீங்கவேண்டில், மலமாயாகன்மங்களின் சேர்க்கையை விடவேண்டும், அப்படி விடுமிடத்து அவற்றிற்குந் தனக்குமுள்ள சம்பந்தத்தை முன்னர் அறியவேண்டும்.

ஆன்மாவும் மலமும் உள்பொருள்களாகலின், அவ்விரண்டற்குமொன்றுபடும் சம்பந்தமிருத்தல்கூடா. இருக்குமெனில், ஒருகாலத்தும் நீங்கவுமாட்டாது. அதனால் அவ்விருபொருளும், தம்முளே கலந்திருக்குமென்றல் அமையாது.

பளிங்கும் அதனையடுத்த செவ்வரத்தமலர் முதலிய பொருள்களும், தம்முளே கலந்திருப்பனவல்ல. ஆயினும், அம்மலர் முதலியவற்றி னிறங்கள் பளிங்கினிடத்து விளங்கக் காண்கிறது. அக்காட்சியை யுற்றுநோக்குமிடத்துப் பளிங்கினும் அந்நிறங் காணப்படமாட்டாது. பளிங்கினிறமே மலரினிறத்தைக் கவர்ந்து செம்மை, கருமை, பொன்மை முதலிய வன்னங்கள் தோன்றநிற்கும்.

அதுபோல ஆன்மாவில் அப்பந்தமிருப்பதில்லை. ஆன்ம சிற்சத்தியிலேயே மலத்தின் குணங் காணப்படும். அதனால் அவ்விருபொருள்கட்குமன்று, அவற்றின் குணங்களுக்கே சம்பந்தமிருப்பதாக அறியவேண்டும். அச்சம்பந்தமும் உண்மையன்று. உண்மையாயின் ஒருகாலத்தும் நீங்கமாட்டாது. பளிங்கு செம்மை நிறமுதலியவாகக் காணப்படும்போது அந்நிறம் உள்ளவாறே பளிங்கிலிருக்கவில்லை. இல்லாதகுணமே உள்ளதுபோற் காணப்படுகின்றது. இல்லாத ஒன்று அதனிடத்துக் காணப்படுமாயின், அதனை யுபாதியென்பர். அவ்வாறே ஆன்மாவினில்லாத மலகுணம், ஆன்மாவுக்கு உண்மையன்று; உபாதியாம். ஒரு காரணம்பற்றிக் காணப்படும் உபாதிக்குணம் மற்றொரு காரணத்தால் நீங்கிவிடும். அது எதுபோலுமெனின் :—உச்சிப்பொழுதில் ஆதித்த ஒளியிலடங்கிநிற்கும் பளிங்குக்கல்லில் வேறு நிறம் காணமாட்டாமைபோலுமென்க.

இங்ஙனம், ஆன்மாக்கள் பந்தநிலை யுபாதிபற்றியதாயிருத்தல்கண்டு அவ்வுபாதியினின்றும் நீங்குதற்கேதுவாகவே சிவோபாசனைவிதிக்கப்பட்டது. ஆதித்தஒளி எப்படியோ அப்படியே சிவசத்தி பிரகாசமாயிருக்கும். ஆதித்த ஒளியிலடங்கிய பளிங்கு வேறுநிறத்தை வாங்காமை எப்படியோ அப்படியே சிவசத்தியிலடங்கிய உயிர், மலகுணத்தைத் தன் குணமாகக் கொள்ளமாட்டாது. அப்பொழுது அவித்தையும், இன்ப துன்பங்களும், பிறப்பிறப்புகளும் எய்தமாட்டா. அதனால் ஆன்மா மலபந்தத்தினின்று நீங்கவேண்டில்

சிவசத்திப் பிரகாசத்தை யடையவேண்டும். அப்பொழுது உச்சிப்பளிங்குபோல யாதொரு உபாதியு மில்லா திருக்கலாம்.

அதனால் இந்நிலை கைகூடும் நிமித்தமே சிவோபாசனை விதிக்கப்பெற்றது. சார்ந்ததன் வண்ணமா மியல்புடைய ஆன்மா சிவத்தைத் தியானித்து அதன் பிரகாசத்திலடங்கி யிருப்பதாகப்பாவிக்கின் அப்பாவனு விசேடத்தினாலே சிவம் வெளிப்பட்டு ஆன்மாவினிடத்து அருளைநிறுத்தும். அதனால் ஆன்மா மலபந்தத்துட்படாது திருவருள் வசப்பட்டு அவ் வருளின்வண்ணமே தன்வண்ணமாகக்கொண்டு சிவானந்தா னுபூதியை எய்தும். மலத்தின் குணத்தைத் தன் குணமாகக் கொண்டு உபாதியுற்ற ஆன்மாவுக்கு, சிவத்தின் குணத்தைத் தன்குணமாகக்கொள்ளுதலாகிய உபாயமே சிறந்த சாதன மாம். இச்சிவோபாசனையின்கருத்து எதைஎதைச்சாரினும் அதனதன் வண்ணமாமியல்புடைய ஆன்மா பாவனுவிசேடத் தாற் சிவத்துவமெய்தி முத்திபெறவேண்டுமென்பதேயாம்.

திருச்சிற்றம்பலம்.

## சிவபெருமானே சுப்பிரமணியக்கடவுள்.

கந்தபுராணம்.

அருவமு முருவுமாகி யாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலகமுய்ய.

வேதாகம முதலிய உண்மைநூல்களிலே சொல்லுகின்ற தேவர்களுக்கெல்லாம் நாயகனாய் விளங்குபவரும், சர்வ ஆன்ம கோடிகளுக்கும் பேரின்பமாகிய முத்திப்பெருவாழ்வை யருள் பவரும் சிவபெருமானே. ஆன்மாக்களின் கன்மங்களுக்கேற்ப நிக்கிரக அநுக்கிரகங்களைச்செய்தருளுவர். அங்ஙனஞ்செய்யுங் காலத்து அவர் அவ்வத்தொழிலுக்கேற்ற பல வடிவங்களைக்

கொண்டருளுவர். அவ் வடிவங்களெல்லாம் ஞானமயமாகிய சத்தியாற் பெறப்படுவனவேயாகும். இதனை "காயமோ மாயையன்று காண்பது சத்திதன்னால்" எனவும், "சத்திதான் வடிவேதென்னிற் றடையிலா ஞானமாகும்" எனவுங் கூறிய சிவஞானசித்திப் பாசுரத்தானுந்தெளிக.

சிவபெருமான் அங்ஙனம்கொண்ட வடிவங்களுள் சுப்பிரமணிய வடிவமும், ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுளும், சிவபெருமானும் ஒன்றேயாவர். இவ்விருவரும் தம்முள் எவ்வித வேற்றுமையுமுடையவரல்லர். இதுபற்றியே அவனே மகேசுரன்; அவனே உமை; அவனே விநாயகன்; அவனே கந்தன் என அதர்வசிகோபநிடதமும், நீயே பெண்; நீயே ஆண்; நீயே குமரன் எனச் சுவேதாசுவதரோபநிடதமுங் கூறுகின்றன.

அன்றியும், சுப்பிரமணியக்கடவுளுக்குச் சிவபெருமானது திருமுகங்களைந்தும், பராசத்தி திருமுகம் ஒன்றுஞ்சேர்ந்து ஆறு திருமுகங்களாய் விளங்குகிறதாலும், சிவபெருமானுக்கு ஐந்து திருமுகங்களும், பத்துத் திருக்கரங்களும், பதினைந்து திருக்கண்களுமாக, முப்பது உறுப்புகளிருப்பதுபோலச், சுப்பிரமணியக்கடவுளுக்கு ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு திருக்கரங்களும், பன்னிரண்டு திருக்கண்களுமாக முப்பது உறுப்புகளிருத்தலானும், சிவபெருமான் தாரகாக்ஷன் முதலிய திரிபுரத் தசுரர்களையும், மன்மதனையும், முறையே புன்முறுவலானும், நெற்றிக் கண்ணினாலும், நீறுக்கியதையொப்ப சுப்பிரமணியக்கடவுள் சூரபன்மன் முதலிய அசுரப்படைகளின் புரங்களையும்,புன்னகையாலும்,திருவிழியாலும் எரித்தொழித்தமையாலும், சிவபெருமானுக்கு இச்சை, ஞானம், கிரியை என மூன்று சத்திகளிருத்தல்போலச் சுப்பிரமணியக்கடவுளுக்கு, வள்ளியம்மை யென்னும் இச்சாசத்தியும், வேற்படையென்னும் ஞானசத்தியும், தெய்வயானை யென்னும் கிரியாசத்தியுமிருத்தலானும், சிவபெருமான் திருநந்திதேவர், சனற்குமாரர் முதலினோர்க்குத் தத்துவ ஞானோபதேசஞ்செய்ததையொப்ப, சுப்பிரமணியக்கடவுள் செந்தமிழ் முனிவரனைச் சிறப்புப்பெயரெய்தியவரும், சிவபெருமானோடு ஒப்ப வீற்றிருந்தவரும்,

கடலை யுளுந்தளவாக்கி யுண்டவரும், நக்கீரனார்க்கு இலக்கணஞ் செவியுறிவுறுத்தியவருமாகிய முனிபுங்கவர்கட்கும், பிரமன் முதலிய பெரிய தேவர்கட்கும், பழனியம்பதியில் சனற்குமாரர்போன்ற நான்கு முனிவர்கட்கும் உபதேசஞ் செய்தமையாலும், சிவபெருமான் உமாதேவியினீங்கித் தக்ஷிணாமூர்த்தமாய்க் கல்லாலின்மீழற்கீழ் யோகவடிவங்கொண்டும், பின்னர், உமையை மணந்து, வெள்ளியங்கிரியிலே போக வடிவங்கொண்டும், முப்புரத்தை யழித்தற்கண் கோப வடிவங்கொண்டு நின்றதையொப்பச் சுப்பிரமணியக்கடவுள் கைலையினின்றும் நீங்கிப் பழனியம்பதியிலே தனியா யமர்ந்து யோகவடிவங் கொண்டும், திருப்பரங்குன்றிலும், திருத்தணிகாசலத்திலும் தெய்வயானையம்மையையும், வள்ளிநாயகியாரையும் மணந்து போகவடிவங்கொண்டும், சூரபதுமன் முதலிய அவுணரை யழித்தற்கண் கோபவடிவங்கொண்டு நின்றமையானும் சிவபெருமான் அருவம், உருவம், அருவுருவம் என மூவடிவங் கொள்வதுபோல சுப்பிரமணியக்கடவுள் மூவடிவங் கொள்ளலானும், சிவ மூலமந்திரம், தூலம், சூக்குமம், காரணம் என மூவகைப் படல்போல சுப்பிரமணிய மூலமந்திர மூவகைப்படுதலானும், சிவபெருமானும், சுப்பிரமணியக்கடவுளும் ஒருவரினொருவர் வேறாகாத் தன்னந்தனிமுதலென்பது மெய்யறிவாளர்கட்கு நன்கு விளங்கும்.

சிவபெருமானும் சுப்பிரமணியக்கடவுளும் வேறெனப் பிதற்றிய சூரபதுமன், பானுகோபன் அக்கினிமுகன், வச்சிரவாகு முதலியோர் அடைந்த தண்டனைகளை யெடுத்துக்கூறும் புராணங்கள் எண்ணிலனவாம். ஆயினும், பானுகோபன், இரணியன், சிங்கமுகாசுரன், தாரகாசுரன், சூரபதுமன் என்னுமிவர்கள் ஒவ்வொரு சமயம் அக்கடவுளின் பெருமையும் உண்மையுமுணர்ந்தார்களெனப் புராணத்திற் கூறியிருப்பதால் மேலாகிய பதங்களைப் பெறுதற்கு முரியாராயினர். இக்காலத்தும் அவ்வுண்மைதோராது அவ்வாறு கருதுகின்றவருளர். இவர்கள் அடையுங்கதி எக்கதியோவென்பது யாமறிகிலேம்.

## கந்தபுராணம்.

சூரபன்மனால் நெடுநாள் துன்பமடைந்த பிரமேந்திராதிய தேவர்கள் ஸ்ரீ கைலாயபதியினிடத்தணுகித் தோத்திரஞ் செய்துநின்றகாலையில், சிவபெருமான் கூறியதாவது:—

(க) அவ்வகை யமர ரெல்லா மன்புசெய் தேத்து மெல்லை
மைவரு மிடற்றுப் புத்தேள் மற்றவர் வதன நோக்கி
யொவ்வுற வெம்மைச் சிந்தை நுணங்கினீர் நுங்கட்கின்னே
யெவ்வர மெனினு மீதும் வேண்டிய திசைத்தி ரென்றான்.

என்றதற்கு பிரமனாதிய தேவர்கள் வேண்டியதாவது:—

(உ) ஆதியு நடுவு மீறு மருவமு முருவு மொப்பு
மேதுவும் வரவும் போக்கு மின்பமுந் துன்புமின்றி
வேதமுங் கடந்துநின்ற விமலவோர் குமரன் றன்னை
நீதரல்வேண்டுநின்பா னின்னையே நிகர்க்க வென்றார்.

ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள் குழந்தைப் பருவத்தில் செய்த திருவிளையாடலைக் கண்டு ஆச்சரியமுற்று உமாதேவியார் சிவபெருமானை வினவியதற்கு அப்பெருமான் கூறியதாவது:—

(ங) அல்லார்குழ லவளின்னண மறியார்களின் வினவ
வொல்லார்புர மடுகண்ணுத லுன்றன் மகனியல்பை
யெல்லாவுயிர் களுமுய்ந்திடவெமை நீ கடவினையா
னல்லாயிது கேண்மோவென வருளாலிவை நவில்வான்.

(ச) ஈங்கண நமது கண்ணி னெய்திய குமரன் கங்கை
தாங்கினள் கொண்டு சென்று சரவணத் திடுத லாலே
காங்கெய னெனப்பேர் பெற்றான் காமர்பூஞ் சரவணத்தின்
பாங்கரில் வருதலாலே சரவணபவனென் றானான்.

(ரு) தாயென வாரல் போந்து தனங்கொள்பா லருத்தலாலே
யேயதோர் கார்த்தி கேயனென்றொரு தொல்பேர்பெற்றான்
சேயவன் வடிவ மாறுந்திரட்டிநீ யொன்றாச் செய்தா
யாயதனாலே கந்த னெனு நாமம்பெற்றான்.

(கூ) நன்முக மிருமூன் றுண்டா னமக்கவைதாமே கந்தன்
றன்முகமாகி யுற்ற தாரகப் பிரமமாகி
முன்மொழி கின்ற நந்த மூவிரண் டெழுத்து மொன்று
யுன்மக னுமத் தோரா றெழுத்தென வுற்ற வன்றே.

(எ) ஆதலினமது சத்தியறுமுக னவனும் யாமும்
பேதக மன்று னம்போற் பிரிவிலன் யாண்டுநின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதமு மழிவில் வீடும் போற்றினர்க்கருள வல்லான்.

(அ) மேலினி யனைய செவ்வேள் விரிஞ்சனைச் சுருதிக் கெல்லா
மூலமதாகி நின்ற மொழிப்பொருள் வினவி யன்னான்
மாலுறச் சென்னிதாக்கி வன்சிறைப் படுத்தித்தானே
ஞாலமன் னுயிரை யெல்லா நல்கியே நண்ணும் பன்னாள்.

(கூ) தாரகன் றன்னைச் சீயத்தடம் பெருமுகத்தி னானைச்
சூரபன் மாவை யேனையவுணரைத் தொலைவுசெய்தே
யாரணன் மகவானேனை யமரர்களிடுக்கணீக்கிப்
பேரருள் புரிவனின்சேய் பின்னர் நீகாண்டி யென்றான்,

சூரபதுமன் மந்திராலோசனை செய்யுஞ்சமயத்தில் சிங்கமுகாசுரன் சுப்பிரமணியக்கடவுளைப்பற்றிக் கூறியது :—

(ய) வரமளித்தயா மழிப்பது முறையன்று வரத்தாற்
பெருமை பெற்றுள சூரனையடுவது பிறர்க்கு
மரிதெனப்பர னுன்னியே தன்னுருவாகு
மொருமகற்கொடு முடித்துமென் றுன்னின னுளத்தில்.

(கக) சென்னிறத்திரு மேனியுந் திருமுக மாறு
மன்னவற்கிரு தொகையுடைத் தோள்களுமாக
முன்னவர்க்கு முன்னாகிய பராபர முதல்வன்
றன்னுதற்கணுலொரு தனிக்குமரனைத் தந்தான்.

(கஉ) மானுடத்தரின் விலங்கினிற் புட்களின் மற்று
மூனமுற்றுழல் யாக்கையிற் பிறந்துளா ரொப்ப
நீநினைக்கலை பரஞ்சுடர் நெற்றியந்தலத்தே
தானுதித்தனன் மறைகளுங் கடந்ததோர் தலைவன்,

சென்னை-600 008. 17/2/22

(கங) சீலமில்லவர்க் குணரவொண்ணாத சிற்பரனைப்
பாலனென் றனையவ னிடத்திற் பலபொருளு
மேலைநாள் வந்து தோன்றிய சிறியதோர் வித்தி
ஞாலம் யாவையு மொடுங்கியே யவதரித்ததுபோல்.

(கச) அருவுமாகுவ னுருவமுமாகுவ னருவு
முருவுமில்லதோர் தன்மையுமாகுவ னூழின்
கருமமாகுவ னிமித்தமுமாகுவன் கண்டாய்
பரமனுடலை யாவரே பகர்ந்திடற் பாலார்.

(கரு) வேதக்காட்சிக்கு முபநிடத் துச்சியில் விரித்த
போதக்காட்சிக்குங் காணலன் புதியரிற் புதியன்
மூதக்கார்க்கு மூதக்கவன் முடிவிற்கு முடிவா
யாதிக்காதியா யுயிர்க்குயிராய் நின்றவமலன்.

(கசு) ஞானந்தானுருவாகிய நாயக னியல்பை
யானு நீயுமா யிசைத்துமென்றா லஃதெளிதோ
மோனந்தீர்கலா முனிவருந் தேறிலர் முழுதும்
தானுங்காண்கில னின்னமுந் தன்பெருந் தலைமை.

(கஎ) தத்தமாற்றங்க ளிறுவிய சமயிகள் பலருங்
கத்துபுன்சொலை வினவின ரவண்செயல் காணார்
சுத்தவாதுள முதலிய தந்திரத் தொகுதி
யுய்த்துணர்ந்திடு நீரரே யொருசிறி துணர்வார்.

(கஅ) கருவி மெய்ப்புலன் காட்டுவான் காண்பவன் காட்சிப்
பொருளெனப்படு நான்மையு மைவகைப் பொறியு
மிருதிறத்தியல் வினைகளுங் காலமு மிடனு
மரபின்முற்றுறு பயனுமாய்நின்றனன் வள்ளல்.

(கக) ஞாலமுள்ளதோர் பரம்பொரு ளுமெனப் புகலு
மாலும்வேதனு மாயையாம் வரம்பினுட் பட்டோர்
மூலமாகிய தத்துவ முழுவதுங் கடந்து
மேலுயர்ந்திடு தனிமுதலவனன்றி வேறார்.

(உ0) தூயபார்முதலாகவே குடிலையின் றிணைவு
மேயவண்டமு முயிர்களு மியன்பொருள் பலவு
மாயுநின்றனன் அல்லனுமாயினன் அவன்றன்
மாயை யாவரே கடந்தனர் மறைகளு மயங்கும்.

(உக) இன்ன தன்மைசேர் முதல்வனைச் சிறுவனென்றிகழ்ந்து
பன்னுகின்றனை யவுணர் தங் கிளையெலாம் படுத்து
நின்னையுந் தடிந் திடுவனோ ரிமைப்பினில் நிரப்புந்
தன்னருட்டிறங் காட்டுவான் வந்தனன் சமர்மேல்.

(உஉ) அற்றமில்வகை யாயிரத்தெட்டெனு மண்டம்
பெற்றனம்மென வியந்தனை தத்துவபேத
முற்றுணர்ந்திலை தரணியோ வளப்பில வளகாண்
மற்றையண்டங்கள் கேட்டியேன் மருளுதிமன்னோ.

(உங) குடிலையீறதா வாரியேமுதலதாக் குழுமி
யுடையவண்டங்க ளலகிலவென்ப ரொன்றின்றி
னடைதலுற்றிடு புவனத்தில் பெருமையாரறிந்தார்
முடிவுறுதமேதார் பொருளினை முடிவு கூறவற்றோ.

(உச) அன்னவாகிய வண்டங்க ளனந்தகோடியையுந்
தன்னதாணையா லோரிமைப்பொழுதினிற் றரவும்
பின்னர் மாற்றவும் வல்லதோ ராதியம்பிரான்சா
னுன்னோடேபொரு மாடலாற் செந்திவந்துற்றான்.

சூரபதுமன் தம்பியாகிய தாரகன் யுத்த சமயம் ஸ்ரீ சுப்பிரமணியப்பெருமான் எதிர்ந்ததைக் கண்டதருணம், தாரகாசுரன் கூறியவை :—

(உரு) தற்பமதுடைய சிந்தைத் தாரக னினையவாற்றாற்
சிற்பரமூர்த்தி கொண்ட திரிவுருவனைத்து நோக்கி
யற்புத மெய்யி நம்மே லமர்செய வந்தா னென்றாற்
கற்பனை கடந்த வாதிக் கடவுளோ யிவன்கொ லென்றான்.

(உசா) முழுமதி யன்னவாறு முகங்களு முந்நான் காகும்
விழிகளி னருளும் வேலும் வேறுள படையின் சீரும்
அழகிய கரமீ ராறு மணிமணித் தண்டை யார்க்கும்
செழுமலரடியுங் கண்டா னவன்றவஞ் செப்பற் பாற்றோ.

சூரபதுமன் குமாரனாகிய இரணியன் கூறியவையாவது :—

(உஎ) எண்டொகை பெற்றவண்டம் யாவையும் புவனவைப்பு
மண்டுபல் வளனுமேனை மன்னுயிர்த் தொகுதிமுற்று
மண்டரு மூவர்தாமு மனைத்துமாகிய தன்மேனி
கண்டிட விமையோர்க்கெல்லாங் காட்டினன் கந்தனென்பர்.

(உஅ) மறைமுதலனைமுன்னோர் வைகலின் வல்லிபூட்டிச்
சிறையிடைவைத்துத்தானே திண்புவியளித்து முக்க
ணிறையவன் வேண்டவிட்டா னென்பரா லினையவாற்றா
லறுமுகன் செய்கைகேட்கின் அற்புதமாகுமன்றே.

(உகூ) அங்கண்மாஞாலந் தன்னைமேலினி யகழுமோட்டுச்
செங்கண்மாலென யாக்கையெயிற்றையோர் சிறுகைபற்றி
மங்குல்வானுலகிற் சுற்றிமருப்பொன்று வழுத்தவாங்கித்
தங்கணுயகற்குச் சாத்தச் சண்முக னளிக்குமென்பர்.

(நூ0) நோலர் புரமூன்றட்ட நிருமலக் கடவுண்மைந்த [லோ
ஞரினும் வலியோனென்கை யறைந்திடவேண்டுங்கொல்
பாரினை யளந்தோனுய்த்த பரிதியை யணியாக்கொண்ட
தாரகன்றன்னை வெற்பைத் தடிந்தது சான்றேயன்றோ.

(நூக) அறுமுகத் தொருவனுரு மமலனையரன்பால் வந்த
சிறுவனென்றிகழன்மன்னு செய்கையாற்பெரியன்கண்டாய்
இறுதிசேர்கற்ப மொன்றினீறிலா தவன்பாற்றோன்று
முறுவலி னழலுமன்றோ வுலகெலாமுடிப்பதம்மா.

(நூஉ) வாசவன் குறையுமந்தண் மலரயன் குறையுமற்றைக்
கேசவன் குறையும் நீக்கிக் கேடிலா வெறுக்கைநல்க
வாசிலோர் குழவிபோலா யறுமுகங்கொண்டா னெண்டே
னீசனேயென்பதல் லாற்பிறிதொன்றை யிசைக்கலாமோ,

(நூநூ) கங்கைதன் புதல்வனென்றும் கார்த்திகைமைந்தனென்றும்
செங்கண்மான்மருகனென்றும்சேனையின்செல்வனென்றும்
பங்கயன்முதலோர்தேறப் பரஞ்சுடர் முதல்வன்றன்னை
யிங்கிவை பலவுஞ்சொல்வ தேழைமைப் பாலதன்றோ.

(நூச) பன்னிருதடந் தோள் வள்ளல் பரிதியம் பகைவன் சூழ்வாற்
றன்னுறு படைஞர்மாய்ந்த தன்மையை வினவித்தாழா
தன்னவர் மீளுமாற்று வளக்கர்மேல் விடுத்தவேலை
வின்னகர் தன்னிற்றூண்டின் யாரிவணிருத்தற்பாலார்.

(நூரு) தாரகற் செற்றதென்றோ றடவரை பொடித்ததென்றால்
வார்புனற் கடலுளுய்த்த வலியரை மீட்டதென்றாற்
கூருடைத்தனிவேல் போற்றிக் குமரன்றாள் பணிவதல்லாற்
போரினைப் புரிது மென்கை புலமையோர் கடனதாமோ.

பானுகோபன் சூரபதுமனிடஞ்சொல்லியவை.

(ருசு) மாயைதந்ததொல் படையினுற் செறுங்கரைமயக்கித்
தூயநீர்க் கடலிட்டனன் சுராதுபுகல
வாயகாலையில் வேல்விடுத்தவர் தமை மீட்ட
சேயைவெல்வது கனவினுமில்லையாற்றெரிக்கின்.

(ருஎ) தெரிந்தமற் றுனக்குரைப்பதென்மூற் பகற்செவ்வேல்
பொருந்துகைத்தலத் தாறுமாமுகனெடு பொருது
வருந்திவன்படை யாற்றலு மிழந்தனை வறிதா
யிரிந்துமற்றிவண் வருதலா லுய்ந்தனையெந்தாய்.

(ருஅ) எற்றதோர்சிலை யிழந்தனை மானமுமின்றித்
தோற்றுவந்தனை தொல்வரத் தியற்கையுந்தொலைந்தாய
சீற்றமுற்றிவன் முருகவேளவன் சினஞ்செய்யி
னூற்றுமோவெலா வண்டமும் புவனங்க ளனைத்தும்.

(ருகூ) ஆரணன்றனை யுலகொடுமுண்டு முன்னளித்த
காரணன்றனி யாழியைக் களத்திடை யணிந்த
தாரகன்றனை நெடியமால்வரையொடு தடிந்த
வீரவீரனை யாவரே வன்மையால் வெல்வார்.

ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள் சூரபதுமன்கொண்ட மாயா வடிவங்களையெல்லாம் ஒழித்து தான் விஸ்வரூபங்கொண்டுநின்று அற்ப வுணர்வுதோன்றச்செய்த சமயம் அவன் கூறியவை.

(ச0) கோலமா மஞ்ஞைதன்னிற் குலவிய குமரன்றன்னைப்
பாலனென் றிருந்தேனந்நாட் பரிசிவை யுணர்ந்திலேன்யான்
மாலயன்றனக்கு மேனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகாரணமாய்நின்ற மூர்த்தி யிம்மூர்த்தியன்றே.

(சக) ஒற்றெனமுன்னம்வந்தோ னொருதனி வேலோன்றன்னை
பற்றிகலின்றிநின்ற பராபர முதல்வனென்றே [னு
சொற்றனன் சொற்றவெல்லாந் துணிபெனக்கொண்டிலே
லிற்றையிப்பொழுதிலீச னிவனெனுந் தன்மைகண்டேன்.

(சஉ) மீயுயர் வடிவங்கொண்டு மேவிய தூதன்சொற்ற
வாய்மைகள் சாதமம்மா மற்றியான் பெற்றவண்ட
மாயவை முழுதுமற்று மறுமுகம் படைத்தசெம்ம
லாயபொற்பதரோமத்திற் றோன்றியே நிற்குமன்றே.

(சரு) சீர்க்குமரேசன்கொண்ட திருப்பெரு வடிவந்தன்னி
லேர்க்குறு மொளியுஞ்சீரு மிளமையு மெழிலுமெல்லா
மார்க்குள வுலகிலம்யா வற்புதத்தோடும் பல்காற்
பார்க்கினும்தெவிட்டிற்றில்லை யின்னுமென்பார்வைதானும்.

(சச) இங்கெனை துயிர்போலுற்ற விளவலு மிளையசேயுஞ்
செங்கையில்வேலோன் றன்னைச்சிறுவனென் றெண்ணல்கண்
பங்கயன் முதலோர்காணாப் பரமனே யாகுமென்று [டாய்
ரங்கிவர் மொழிந்தவாறுஞ் சாதமேயாணை தன்றே.

(சரு) அண்ணலார்குமரன்மேனி யடிமுதன் முடியின்காறு
மெண்ணிவாயூழி கால மெத்திறம் நோக்கினாலும்
கண்ணினாலடங்கா துன்னிற் கருத்தினா லடங்காதென்பா
னெண்ணினா னயருக்கென்கை யருளென நாட்டலாமே.

(சசா) திருகிய வெகுளிமுற்றுந் தீர்ந்தன செருவினாக்க
மருகிய துரோமம்புள்ளி யாயின விழியிற்றாநீர்
பெருகியதிவன்பாலன்பு பிறந்தன தமியேற்குள்ள
முருகிய தென்புதானு மூலைமெழு காகுமன்றே.

(சஎ) போயின வகந்தை போதம் புகுந்தன வலத்ததான
தூயதோர் தோளுங்கண்ணுந் துடித்தன புவனமெங்கு
மேயினபொருள்கண்முற்றும் வெளிப்படுகின்றவிண்ணோர்
நாயகன்வடிவங்கண்டே னற்றவப் பயனீதன்றோ.

(சஅ) சூழுதல்வேண்டுந்தாள்கள் தொழுதிடல் வேண்டுமங்கை
தாழுதல் வேண்டுஞ்சென்னி துதித்திடல் வேண்டுந் தாலு
வாழுதல்வேண்டுந் தீமையகன்றநா னியற்காளாகி
வாழுதல்வேண்டும் நெஞ்சந் தடுத்தது மானமொன்றே.

(சகூ) நேரிலனாகியீண்டே நின்றிடு முதல்வ னீடும்
பேருரு வதனைநோக்கிப் பெரிதுமச்சுறுவதல்லா
லாரிது நின்றுகாண்பா ரமரரி லழிவிலாத
சீரியவரங்கொண்டுள்ளே னாதலிற் றெரிகின்றேனால்.

## ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள் மகாமேருவின் தேவர்கள்காண விஸ்வரூபங்கொண்டு நின்றசமயத்தில் தோத்திரஞ்செய்தல்

(ருo) அடிமுதல் முடியின்காறு மறுமுகனுருவமெல்லாங்
கடிதவனருளானோக்கிக் கணிப்பிலா வண்டமுற்று
முடிவறு முயிர்கள்யாவு மூவருந் தேவர்யாரும்
வடிவினி லிருப்பக்கண்டு வணங்கியே வழுத்திச்சொல்வார்

(ருக) அம்புவி முதலாம்பல்பே ரண்டமு மங்கங்குள்ள
வும்பரு முயிர்கள்யாவு முயிரலாப் பொருளு மாலுஞ்
செம்பதுமத்தினானுஞ் சிவனொடுஞ் செறிதல்கண்டோ
மெம்பெருமானின்மெய்யோ வகிலமு மிருப்பதம்மா.

(ருஉ) அறிகில மின்னார்கா று மகிலமு நீயேயாகி
யுறைதரு தன்மைநீவந் துணர்த்தலி னுணர்ந்தாமன்றே
பிறவொரு பொருளுங்காணேம் பெரும நின்வடிவமன்றிச்
சிறியம்யா முனதுதோற்றந் தெரிந்திடவல்லமோதான்.

(ருங) முண்டக வொருவன் றுஞ்சமுராரிபேருருவாய் நேமிக்
கண்டுயி லகந்தைநீங்கக்கண் ணுதற் பகவனெல்லா
வண்டமுமணிப்பூணாமாகவே யாங்கோர்மேனி
கொண்டனனென்னுந்தன்மை குமரநின்வடிவிற்கண்டேம்.

(ருச) நாரணன் மலரோன் பன்னா ளடைவுந் தெரிவின்றாகிப்
பேரழலுருவாய் நின்றபிரான்றிருவடிவேபோலுன்
சீருருவுற்ற தம்மா தெளிகில ரவருமெந்தை
யாருமொய்தினம்போலடிமுடி தெரிந்திடாரோ.

(ருரு) அரியொடு கமலத்தேவு மாடல்செய்ய விலந்தன்றோ
டொருவரை யொருவர் நுங்கி யுந்தியான்முகத்தானல்கி
யிருவருமிகலுமெல்லையெடுத்த பேருருநீகொண்ட
திருவுரு விதனுக்காற்றச்சிறியனபோலுமன்றே.

(ருசு) ஆகையா லெம்பிரானீ யருவுருவாகிநின்ற
வேகநாயகனேயாகு மெமது மாதவத்தாலெங்கள்
சோகமானவற்றைநீக்கிச்சூர்முதறடிந்தேயெம்மை
நாகமேலிருத்துமாற்று னண்ணினை குமரனேபோல்.

(ருஎ) புன்னெறியதனிற்செல்லும் போக்கினைவிலக்கிமேலா
நன்னெறியொழுகச்செய்து நவையறுகாட்சிநல்கி
யென்னையுமடியனாக்கி யிருவினைநீக்கியாண்ட
பன்னிரு தடந்தோள்வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி.

(ருஅ) பாசாகியேனைப் பொருளாயுயிர்ப்பான்மையாகி
பேராவுயிர்கட் குயிராய்ப் பிறவற்றுமாகி
நேராகித் தோன்றலிலதாகிநின்றான்கழற்கே
யாராதகாதலொடும் போற்றியடைது மன்றே.

ஸ்ரீ சுப்பிரமணியப்பெருமான் ஆக்ஞைபின்படி வீரமாமகேந்திரத்திற்கு சூரபதுமனிடந் தூதுசென்ற வீரவாகுமூர்த்தியானவர் அங்கண் சிறையிலகப்பட்டுக் கிலேசமுற்றிருந்த சயந்தன் முதலான தேவர்களிடம் சூக்குமவடிவுடன் சென்றுதோன்றி அவர்கட்குத் தேறுதலாக மொழிந்தவை:—

## கந்தபுராணம்.

(ருகூ) இறைதருமமரர்தம்மோ டிந்திரன் புதல்வன்றன்னை
யறிவரி லறிவன் கண்ணுற் றறுமுகம் படைத்தவண்ணல்
மறையிடை வதிந்த நுங்கள் வன்சிறை மாற்றும் வைகல்
சிறிதிவ ணிருத்திரென்று பின்னருஞ் செப்புகின்றான்.

(சூ0) தன்னிகரின்றி மேலாய்த் தற்பர வொளியா யாரு
முன்னரும் பரமாய் நின்ற வொருவனே முகங்க ளாறும்
பன்னிரு புயமுங்கொண்டு பாலகன் போன்று கந்த
னென்னுமோர் பெயருமெய்தி யாவருங் காணவந்தான்.

(சூக) பங்கயமுகங்களாறும் பன்னிருபுயமுங்கொண்டே [னிற்
யெங்கடம் பெருமான்போந்த வேதுமற்றென்னை யென்
செங்கண்மா லுந்திபூத்தோன் சிறுமையு மகவான்றுன்பு
முங்கடஞ்சிறையுநீக்கி யுலகெலா மளிப்பக்கண்டாய்.

சூரபதுமன் கொலுவீற்றிருந்த சபாமண்டபத்திற் சென்ற வீரவாகுமூர்த்தி அவனைநோக்கி யுரைத்தவை :—

(சூஉ) உய்யலாவதோர் பரிசினை யுணர்வுறு துழலுங்
கைய கேண்மதி கட்செவி மதியொடுகலந்த
செய்ய வார்சடைப் பரம்பொருள் திருநுதல் விழிசே
ரையன் மேதக வுணர்ந்திலை பாலனென் றறைந்தாய்.

(சூங) மானுடத்தரைத் தேவென்பர் வானகத் தவரை
யேனைமுத்தொழி லவரென்ப ரிருவர்தங் களையு
நானி லத்தினிற் பரம்பொரு ளிவரென நவில்வர்
ஆன சொற்றிற முகமனே சரதமற்றன்றால்.

(சூச) ஆயபுல்லிய புகழ்ச்சிபோற் கொள்ளலையறிவோர்
தேய மாவது யார்க்குமெட்டாதது தெளியிற்
றூய வீடுபேறருளுவ துபநிடத் துணிவாம்
வாய்மை யாவது புகலுவன்கே ளென வகுப்பான்.

(௬௫) மண்ணளந்திடு மாயனும் வனசமே லவனு
மெண்ணரும் பகறேடியுங் காண்கிலா திருந்த
பண்ணவன் னுதல் விழியிடைப் பாஞ்சுடருருவாய்
உண்ணிறைந்த பேரருளினான் மதலையா யுதித்தான்.

(௬௬) முன்னவர்க்கு முன்னாகுவோர் தமக்குமுற் பட்டுத்
தன்னை நேரிலா தீசனாந் தனிப்பெயர் தாங்கி
யின்னு யிர்க்குயி ராயரு வுருவமா யெவர்க்கு
மன்னை தாதையா யிருந்திடும் பரமனே யவன்காண்.

(௬௭) ஈசனே யவனாடலான் மதலையா யினன்காண்
ஆசிலாவவ னறுமுகத் துண்மையா லறிநீ
பேசி லாங்கவன் யானொடு பேதக னல்லன்
றேசு லாவகன் மணியிடைக் கதிர்வரு திறம்போல்.

(௬௮) பூதமைந்தினுட் கீழ்நிலைத் தாகிய புவியு
ளோது கின்றபல் லண்டத்தி னோராயிரத் தெட்டுங்
கோதி லாக்கமும் படைகளு முனக்குமுன் கொடுத்த
வாதியீசனே யவனெனின் மாற்றுவ தரிதோ.

(௬௯) ஏதமில்புவி யண்டங்கள் பெற்றன மென்றே
பேதை யுன்னினை சிறிதவன் றன்னருள் பெறுவோர்
பூத மைந்தினு மேனைய திறத்தினும் புறத்து
மீது மாமண்ட மெவற்றிற்கும் வேத்தியல் புரிவார்.

(௭௰) ஆதியாகிய குடிலையு மைவகை பொறியும்
வேதம் யாவையுந் தந்திரப் பன்மையும் வேறு
வோத நின்றிடு கலைகளு மவ்வற் றுணர்வாம்
போதம் யாவையும் குமரவேள் பொருவிலா வுருவம்.

(௭௧) எங்கணும்பணி வதனங்க ளெங்கணும் விழிக
ளெங்கணுந்திருக் கேள்விக ளெங்கணுங் கரங்க
ளெங்கணுந்திருக் கழலடி யெங்கணும் வடிவ
மெங்கணுஞ் செறிந்தருள்செயு மறுமுகத் திறைக்கோ.

(௭௨) தாமரைக்கணான் முதலிய பண்ணவர் தமக்கு
மேமுறப்படு மறைக்கெலா மாதிபெற் றியலு
மோமெனப்படுங் குடிலையே யொப்பிலா முருகன்
மாமுகத்துளொன் றாமவன் றன்மையார் வகுப்பார்.

(எங) மூக்கண் மூர்த்தியு மாங்கவன் மூண்டகா சனனுஞ்
சக்க ரப்படை யண்ணலு மாங்கவன் மூனே
திக்குப் பாலருங் கதிரகளு முனிவருஞ் சிறப்பின்
மிக்க தேவரு மாங்கவன் யாவர்க்கு மேலோன்.

(எச) ஈட்டு மன்னுயி ரெவற்றிற்கு மிருவினைப் பயனைக்
கூட்டி வானவ னுங்கவை தலையெனக் கூடின்
வேட்ட மேனிலைக் கதிபுரி வாணவன் மேலாய்க்
காட்டு வான்முதற் றிறமெலா மாங்கவன் கண்டாய்.

(எரு) சிறுவன் போலுறும் குரவனே போலுறுந் தினையிற்
குறியன் போலுறு நெடியவனாகியுங் குறுகு
நெறியி னின்னணம் வேறுபல வுருக்கொடு நிலவு
மறிவர் நாடரும் கந்தவே ளாடலா ரறிவார்.

(எசு) சிவன தாடலின் வடிவமா யுற்றிடும் செவ்வே
ளவன தானையி னன்றியே பெயர்கிலா தணுவு
மெவ ரவன்றனி யாற்றலைக் கடந்தவ ரிவணீ
தவம யங்கினை யவன்றனி மாயையிற் சார்வாய்.

(எஎ) எல்லை யில்லதோர் பொருளெலா மாகுறு மியாவு
மல்ல னாகியு மிருந்திடு மருவமு மாகும்
பல்வ கைப்படு முருக்கொளும் புதியரிற் பயிலுந்
தொல்லை யாதியா மநாதியு மாகியே தோன்றும்.

(எஅ) வாரி வீழ்தரும் புன்னுனித் துள்ளிகண் மாண
வேரி லாதமர் குமரவே ணெடியபே ருருவி
னோரு ரோமத்தி னுலப்பிலா வண்டங்களுதிக்கு
மார வன்றிரு மேனியின் பெருமையை யறிவார்.

(எகூ) தொலைவிலாவுயிர்த் தொகுதியுந் தொல்லை யையும்பூதத்
தலகிலண்டமு மேனவு மாதியன் குமர
னிலைகொண் மேனியி னிவர்தரு முரோமத்தினின்றே
யுலைவை யின்றிமுன் னுதித்திடு மிறுதினா ளொடுங்கும்.

(அய) ஆவ தாகிய வடிவத்தி னகிலமுஞ் செறிந்து
மேவு மந்நிலை யனையனே யல்லது வேறிங்
கேவர்கண்டன ரவ்வுரு வியற்கையை யெங்கோன்
றேவர் யாவர்க்குங் காட்டிடக் கண்டனர் சிறிது.

(அக) தண்ட லில்லதோரொன்றொரு மயிர்நுனித் தலையி
னண்ட மெண்ணில கோடிகள் கோவைபட் டசையப்
பண்டு மேருவிற் கந்தவேள் கொண்டதோர் படிவங்
கண்டி லாய்கொலாங் கணிப்பிலாப் பவம்புரி கடியோய்.

(அஉ) அன்று கந்தவே ளமைந்ததோர் பெருவடி வதனு
ளொன்று ரோமத்தி னிருந்ததற் காற்றிடா துனதாய்த்
துன்று மாயிரத் தெட்டெனு மண்டமாந் தொகையு
மின்று நீயது தெரிகிலை சிறுவனென் றிகழ்ந்தாய்.

(அங) அளப்ப ருங்குணத் தாதியா மெம்பிரா னமரர்
தளைப்படுஞ்சிறை மாற்றவுஞ் சதுர்முகன் முதலோர்
கொளப்ப டுந்துய ரகற்றவுங் கொடியரை யறுத்து
வளப்ப டும்பரி சுலகெலாம் போற்றவும் வந்தான்.

(அச) வாழியானநின் னாயுளும் வன்மையும் வரமும்
கேழில் சுற்றமும் படைகளும் வான்றொடக் கிளர்ந்து
பூழியாலுயர் மால்வரைச் சூழலிற் புகுந்த
ஆழிமாருதம் போலடு மெம்பிரா னொருவேல்.

(அரு) ஆகையாலிவை யுணர்ந்திலை யிணையிலா தமர்ந்த
வேகநாயக முதல்வனைப் பாலனென் றிகழ்ந்தாய்
சேணுலாவிய மனமுடைக் கற்பிலாச் சிறியோய்
போகபோக யாமிவ்வொரு தவற்றையும் பொறுத்தாம்.

(அசா) நொய்ய சொற்களா லெந்தையை யிகழ்ந்தனை நொடிப்பின்
வெய்ய நாத்துமித் துன்னுயிர் வாங்குவம் விடுத்த
வைய னாணையன் றாதலி னளித்தன மதனா
லுய்தி யிப்பக வேற்படைக் குண்டியா யுறைவோய்.

(அஎ) உறுதி யின்னமொன் றுரைக்குவ நீயுமுன் கிளையு
மிறுதி யின்றியே யெஞ்சுதல் வேண்டுமே லிமையோர்
சிறைவிடுக்குதி யிகலினைத் தவிருதி செவ்வே
ளறைக ழற்றுணை யரணமென் றுன்னியே யமர்தி.

சதுரங்கசேனைகள் சூழச் சூரபதுமன் யுத்தகளத்தை நோக்கிவருங்கால் அவற்றைக் கண்ணுற்ற தேவராஜன் நடுக்க முற்று மகாவிஷ்ணுவின் பக்கலிற்சார்ந்து சொன்னவற்றிற்கு. அவர் கூறியவை :—

(அஅ) அழுதிறல் வலிபெற்றுள்ள வவுணராம் பானுட் கங்குல்
விடிவது மமரர் தங்கள் வெஞ்சிறை வீடுமாறு
நெடிய தொல் வெறுக்கை தன்னை நீங்கிய நமது துன்ப
முடிவது மில்லை கொல்லோ மொழிந்தருண் முதல்வ
[வென்றான்.

(அகூ) இந்திர னினைய தன்மை யிசைத்தலு மிலங்கை காத்த
வைந்திரு சென்னியானை யடுதிறல் கொண்டு நின்ற
செந்திரு மருமத்தண்ணல் தேவரை யளிக்குந் தொல்லோன்
புந்திகொள் கவலைநாடி யினையனபுகலா நின்றான்.

(கூ0) காலமாய்க் கால மின்றிக் கருமமாய்க் கரும மின்றிக்
கோலமாய்க் கோல மின்றிக் குணங்களாய்க் குணங்களின்றி
ஞாலமாய் ஞாலமின்றி யநாதியாய் நங்கட்கெல்லர்
மூலமா யிருந்தவள்ளல் மூவிரு முகங்கொண் டுற்றான்.

(கூக) குன்றுதோறாடல் செய்யுங் குமரவேள் மேருவென்னும்
பொன்றிகழ் வெற்பின் வந்து புவனங்கண் முழுது மங்கட்
சென்றுறை யுயிர்கண் முற்றுந் தேவருந் தன்பாற் காட்டி
யன்றொரு வடிவங் கொண்ட தயர்த்தியோ வறிந்த நீதான்.

(கூஉ) பொன்னுரு வமைந்த கஞ்சப் புங்கவ னாகி நல்கு
மென்னுரு வாகிக் காக்கு மீசன்போ லிறுதிசெய்யு
மின்னுரு வென்ன யார்க்கும் வெளிப்படைபோலுமன்னான்
றன்னுரு மறைகளாலுஞ் சாற்றுதற் கரியதன்றே.

(கூங) பாயிருங் கடலிற் சூழ்ந்த பற்றலர் படையை யெல்லா
மேயெனு முன்னம் வீட்டுஞ் சிறுவனென் றெண்ணலைய
வாயிர கோடி கொண்ட வண்டத்தி னுயிர்கட் கெல்லா
நாயக னவன்கா ணஞ்செய் நல்வினைப் பயனால் வந்தான்.

(௩௪) சூரனே முதலோர் தம்மை யிமைப்பினிற் றொலைக்க வுன்னி
மூரலா லடுவன் கொண்ட முனிவினு லடுவன் வாய்மைச் [ன்
சீரினு லடுவனுட்டச் செய்கையா லடுவ னென்று
நேரிலா முதல்வன் வன்மை யாவரே நிகழ்த்தற் பாலார்.

(௩௫) பாரிடர் சேனையோடு படர்ந்தது மிலக்கத் தொன்பான்
வீரர்கள் புடையிற் போற்ற மேயதும் படைகள் பற்றிச்
சூரனை யடுவான் வந்த சூழ்ச்சியுந் தூக்கின் மாதோ
வாரண முதலா மேலோற் கனைத்துமோ ராடலேகாண்.

(௩௬) ஐய்யதோர் குமரனேபோற் றோன்றிய முதல்வன் சூழ்ந்த
வெய்யதா னவரை யெல்லா விரைந்துடனறுத்து நீக்கிக்
கையில்வே லதனுற்சூ ரூற்றலுங் கடக்கும் யாது
மையுறேல் காண்டி யென்று னறிதுயி லமர்ந்த பெம்மான்.

(௩௭) மாலிவை பலவுங் கூறி மகபதி யுளத்தைத் தேற்றி
யேர்லமோ டவுண வெள்ள மும்பருஞ் செறிந்த செவ்வேள்
பாலுற நின்று போரின் பரிசினைப் பார்த்து மென்றே
வேலுடை முதல்வன் பாங்கர் விண்ணவ ரோடும் போந்தான்.

நிற்க, பின்பொரு சமயம் சூரபதுமன் தனது சைனியங்களியாவுமிழந்து தேருடன் ஆகாயத்திற்போயு அண்டாண்டங்களிற்போயு மறைந்தபோது ஆங்காங்கு தொடர்ந்து சுப்பிரமணியப்பெருமான் சென்றதைக் கண்ணுற்று யுத்தகளத்தினின்ற பிரமேந்திராதிய தேவர்கள் கிலேசமுற்று வாடிய தருணம் மகாவிஷ்ணு கூறியவை :—

(௩௮) மாக மேனிமிர் மற்றை யண்டத்தினுஞ்
சேகு லாவிய சிந்தையன் றன்னுட
னேகி ஞனைய னென்னினித் தான்வினை
வாகுமோ வென்று மஞ்சுது மேழையேம்.

(கூகூ) என்ற காலை யிலங்கெழிற் பூவைபோ
நின்றமாயவ னீண்மல ரோன் முதற்
றுன்றும் வானவர் சூழலை நோக்கியே
யொன்று மன்பொ ருளப்பட வோதுவான்.

(கOO) வஞ்ச மேதரு மவுணர்கோ ளுற்றலை மதித்திண்
டஞ்சி யஞ்சியே யிரங்கலி ராறுமுகத் தொருவன்
செஞ்சிலைத்தனி வன்மையும் வீரமுந் தெரிந்து
நெஞ்ச கத்திடை யையுறு கின்றது நெறியோ.

(கOக) ஓதி யாகியு முணர்ந்தவர்க் குணரவு மொண்ணு
நீதியாகியு நிமலம தாகியே நிகழுஞ்
சோதி யாகியுந் தொழூநிடு மெம்மனோர்க் கெல்லா
மாதி யாகியு நின்றவ னறுமுக னன்றோ.

(கOஉ) ஈறி லாதமர் பரமனே குழவியி னியல்பா
யாறு மாமுகங் கொண்டுதித் தானென்ப தல்லால்
வேறு செப்புசற் கியையுமோ மேலவன் றன்மை
தேறி யுந்தெளி கின்றில வுமதுசிந் தையுமே.

(கOங) ஐய மெய்தலி ராயிர கோடியண் டத்தும்
வெய்ய னேகினுந் தொடர்ந்துபோய் வெஞ்சம ரியற்றிச்
செய்ய வேலவன் றுறந்தவந் திடுந்தினைத் துணையிற்
கையி னெல்லி போற் காட்டுவ னீவிருங் காண்டீர்.

(கOச) என்று மாயவன் கழறலு மயன்முத லெவரு
நன்றெ னத்தெளி வுற்றன ரவ்வழிகண்ணு
னென்றி னுபிர கோடியண்டத்தினு மோடி
நின்று நின்றம ராடின னெந்தையை நேர்ந்து.

(கOரு) வென்றி றற்சம ராற்றியே யவுணர்கோன் மீட்டு
மிந்த வண்டத்து மகேந்திர வரைப்பில்வந் திறுத்தான்
முந்து நீழலை விடாதுசெல் வோரென முனிந்து
கந்த னுந்தொடர்ந் தவனொடு போந்தனன் கடிது.

(௧0௬) போந்திடு தன்மைநோக்கிப் புராரிதன் புதல்வனங்க
ளேந்தலைத் தொடர்ந்தா னென்று விம்பரி லவுணர்தானை
தீந்தழ லென்னப் பொங்கிச் செங்கையிற் படைகள் வீசி
யாய்ந்திடு முணர்வின் மேலாமாதிதன் புடைசூழ்ந் தார்த்தார்.

(௧0௭) நாதனு மதனைநோக்கி நன்றிவர் முயற்சி யென்று
வோதினன் முறுவல்செய்யவொன்னவன் றானைதொன்றாள்
மூவெயி லென்ன நீறாய் வெந்துடன் முடிந்த தம்மா
தாதைதன் செய்கை மைந்தன் செய்வது தக்கதன்றே.

(௧0௮) ஆனதோர் காலை தன்னி லறுமுகம் படைத்த வண்ணல்
தூநகை யங்கி செல்லத் துண்ணெனப் பதைத்து வீழ்ந்து
தானவானிகம் வெந்த சாம்பரின் குன்றை நோக்கி
வானவர் மகிழ்ந்து பூத்தூய் வள்ளலை வழுத்திநின்றார்.

---

(௧0௯) ஆறிருதடந்தோள் வாழ்க அறுமுகம்வாழ்க வெற்பைக்
கூறுசெய்தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வே
ளேறிய மஞ்ஞைவாழ்க யானைதன் னணங்கு வாழ்க
மாறிலாவள்ளிவாழ்க வாழ்கசீ ரடியாரெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.

# இந்நூல் அச்சிடுதற்குக் காரணம்.

## குசேலோபாக்கியானம்.

ஓங்குபெரு ஞானியர்போற் பேசுவா ரவருண்மை வேடம் போலப்
பாங்குபெற வுடற்புனைவார் சற்கருமஞ் செய்வோர்தம் பக்கமேகி
நீங்குகவென் றெழிப்பாரிந் நிலமேலாம் பிரமத்தினிலையேயென்பா
ரீங்கவர்க டாங்கெடுவதன்றிமற்றோ ரையுங்கெடுக்கு மெண்ணம்
[பூண்டோர்.

எனக்கூறியவாக்கிற்கிலக்காக அரிய திருவேடந்தாங்கிய சுவாமிகளிருவர் மடாலயத்திற்குவரப்பெற்று வந்தனைவழிபாடியற்றி வார்த்தையாடுங்கால் அவர்களுரைத்ததாவது :—

" கருதியிடும் புராணம்பொய் யிதிகாசம்பொய்
காரியகாரணமும்பொய் யீசன்பொய்யே
பாவியிடு முலகும்பொய் யுயிர்களும்பொய்
பந்தமொடு மோட்சசுக துக்கம்பொய்யே
சுராசுர ரெவரும்பொய் தியானம்பொய்யே
சுத்தமதா மனதும்பொய் வாக்கும்பொய்யே
யுரமருவாக் கௌணம்பொய் முக்யம்பொய்யே
வுணர்வுருவாம் பரப்பிரம மொன்றேமெய்யாம்.

தானமிலை தீர்த்தமிலைத் தலமுமில்லைத்
தருமமிலைத் தெய்வமிலைச் சேவையில்லை
யானியிலை விருத்தியிலை யடைவோனில்லை
யறமுமிலை யகமுமிலை யனைத்துமில்லை
ஞானமிலைப் பத்தியிலைக் கருமமில்லை
ஞாதருஞா ஞதிகளோ ரணுவுமில்லை
யீனமிலாச் சன்மயமா யிலங்குஞ்சத்தா
யின்புருவா யுளதுபரப் பிரமமொன்றே.

சுத்தமாம் பரப்பிரம் சொரூபமே நான்
சுககனமாம் பரப்பிரம சொரூபமே நான்
சத்தியமாம் பரப்பிரம சொரூபமே நான்
சலநமிலாப் பரப்பிரம சொரூபமே நான்
நித்தியமாம் பரப்பிரம சொரூபமே நான்
நிரஞ்சனமாம் பரப்பிரம சொரூபமே நான்
அத்துவித பரப்பிரம சொரூபநாமெனன்
றனவரதஞ் சிந்தித்து விகற்பந்தீர்வாய்."

எனக்கூறிய ரிபுகீதையை நீங்கள் பார்த்ததில்லையா? இவ்வுலகின்கண் அனேகர் இவ்வரிய நூலாராய்ச்சியின்றி சித்தாந்தமென ஓர் நூலைக் கைப்பற்றி அதில் முப்பொருளுண்மையை விளங்கக்கூறுவதெனவும், அவை பதியென்றும் பசுவென்றும் பாசமென்றுமேயாமெனவும் கருதி வாளை வீணாக்கிச் சரியையாதிகளைக் கைக்கொண்டொழுகிக் காலங்கழிக்கின்றார்கள். அஃதன்றி தாங்கள் சுப்ரமணியமூர்த்தியை பிரதிஷ்டை செய்து பூஜித் துபாசனை செய்வதனால், மந்திரவாதியெனப் பெயர்பெறலாமன்றி அம்மூர்த்தியுபாசனையால் மெய்ஞ்ஞானத்தையாவது மெய்முத்தியையாவது பெறக்கூடுமோவெனக்கூறினர்கள். அதற்கு வேறு சமாதனங்கூறி அவர்களையொழிக்கவெண்ணமின்றிசுவாமிகாள்! தங்களுபதேசம்போதுமானதே!

"பாயவாருயிர் முழுவதும் பசுபதி யடிமை
யாய வெவ்வகைப் பொருள்களு மவனுடைப் பொருள்கள்
மேய விவ்வண மலதுவே றின்றெண வுணர்ந்த
தூய மெய்த்தவத்தடியவர் துணையடி தொழுவாம்.

நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரைக் கோயிலான்
றன்கடன் னடியேனையும் தாங்குதல்
என் கடன்பணி செய்து கிடப்பதே."

எனும் பாசுரத்தைக் கூறி பின்னர் அவனிடம் வாதையாடச் சகியாதவனாக விருந்தனன். இன்னும் சிவனடியார்களிடம் அவர்கள் உபதேசிக்கத் தொடங்கியதற்கு அவர்கள் தக்கசமாதனஞ் சொன்னதுமன்றி அடியேன்பாலுமறிவித்துச் சுப்பிரமணியப் பெருமான் பெருமையைப்பற்றி ஒரு வியாசமெழுதவேண்டுமெனக்கேட்டுக்கொண்டதற்கிணயந்து, சிவனே தகனேன்பதேழுத எண்ணியதுடன் பதி, பசு, பாசம் எனமுப்பொருளுண்மையைச் சுருக்கி, தன்னையறிதல், கடவுள், சிவம், சிவோபாசனே என்பவற்றை முன்னர் விளக்கி சிவனே தகனேன்பதைப் பின்னர் அச்சிடலாயிற்று.

பொறுமையுடையோர்க்குப் பொருளுண்மை தோன்று, என்னும் பழமொழியிருத்தலால் அவர்கணிற்க.

அமைதியொடு நோக்கும் அறிஞர்கள் குற்றங்களைந்து குணம் பாராட்டுவரெனக் கருதி வெளியிட்டனம்.

" என்னை நீ வருந்திக் கவிபாடினு மெடுத்தகற்பனை முன்னோர்
சொன்ன தேயலா னுதன மொன்றிலை தொன்மை நூல்பலவாகு
முன்னை நூலெலாந் தந்தவ னீயலை முற்றுணர்ந்தனையல்லை
யுன்னின் மிக்கவர் பலருளர் கல்வியாலுள்ளமே செருக்கென்னே."

என, வேதநாயகம்பிள்ளையவர்களருளிய நீதிநூற் பாசுரத்தை நினைந்தும், முன்னோருரைத்தவற்றைப்பொன்னேபோற்போற்றுவ மென்றதைக் கருதியும் வெளிவரச்செய்ததற்கு உலகம் பொறுக்க.

இங்ஙனம்,

ஆனந்தசண்முக சரணாலயன்,

சிவகுருநாதனிலயம்,

தில்லைவளாகம்.

---

எட்வர்ட் பிரஸ்—திருவாரூர்.